மாதம் ஒருமுறை பூக்கும் மின்னிதழ்...

இளசாக, மிருதுவாக, மென்மையாக...

பிப்ரவரி 2023

குருத்து 4 | ஓலை 11

# குருத்தோலை

வளருவோர்க்கும் வளர்ந்தோர்க்கும்



# பொறுப்பாசிரியர் கடிதம்





**நண்பர்களுக்கு வணக்கம்.**

இந்த இதழ் சில சிறப்பான அறிவிப்புகளையும் செய்திகளையும் சுமந்து வருகிறது.

குருத்தோலை இணையதளத்தில் பழைய இதழ்களைத் தரவிரக்கம் செய்து கொள்ளலாம். தேதியிடப்படாத குருத்தோலை இதழ் ஒன்று பரீட்சார்த்தமாக அச்சு வடிவில் வெளியிடப்படலாம். உங்கள் ஆதரவு இருந்தால். குருத்தோலை சார்ந்த படைப்புகள் இணையத்திலும் சில தளங்களில் வெளியாகவிருக்கின்றன.

உலக அளவில் பெரும் பணவீக்கமும் பொருளாதார நெருக்கடியும் வரப்போவதாகவும், கவனமாக இருக்க வேண்டும் என்றும் செய்திகள் வெளியாகின்றன. சில நாடுகளில் அதன் வீரியத்தை இப்போதே நாம் கண்டு கொண்டிருக்கிறோம். Y2K என்றொரு பெரும் பூதம் உலகத்தையே கலங்கடித்துக் கொண்டிருந்தது. ஆனால் அதன் மூலம் பலருக்கு வேலைவாய்ப்புகள் கிடைத்தன. எதிர்பார்த்த குழப்பங்கள் ஏற்படவில்லை. பரபரப்புடன் தடுப்பு நடவடிக்கைகளும் அதிகம் இருந்ததால்தான் Y2K பெரும் பாதிப்பை ஏற்படுத்தவில்லை என்றும் சொல்லலாம். கோவிட் உலகத்தை உலுக்கிச் சென்றது. ஆனாலும் வாழ்க்கை என்னவோ தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

எல்லாவற்றுக்கும் மேலான இறைவனின் ஆட்சி இந்த குழப்பங்களுக்கு நடுவிலும் உதவும் கரங்களையும் இளகிய இதயங்களையும் நமக்கு வெளிக்காட்டியிருக்கின்றன. நாம் இவற்றைக் கடந்தோம், எவற்றையும் கடப்போம், எல்லாவற்றையும் படைத்துக் காக்கும் எல்லாம் வல்ல இறைவனின் அருளால்.

அன்புடன்

S. மைக் ஜெயஸ்


**பொறுப்பாசிரியர்**







https://youtu.be/-7BC8MXwT4o

# இதற்குள்ளே...














| | |
|---|---|
| வாக்குத்தத்தம் | 4 |
| வாழ்க்கைப் பயணம் | 8 |
| சூசன்னா வெஸ்லி | 10 |
| மாயமான நினைவுப் பொருட்கள் | 13 |
| இயேசு கேட்ட கேள்விகள் | 14 |
| மானுட மான்புகள் | 18 |
| சின்ன அண்ணன் | 20 |
| காணவில்லை | 23 |
| குழந்தை வளர்ப்பு | 24 |
| டீன் ஏஜ் டீஜேஸ் | 26 |
| முழுமைக் கிறிஸ்தவம் | 30 |
| ஹலோ மிஸ்டர் மெல்வின் | 32 |
| தனியுமா ஆண்பிள்ளை மோகம் | 36 |
| மாறிப்போனவைகள் | 44 |
| புன்னகையைப் பரவச் செய்வோம் | 48 |



**கௌரவ ஆசிரியர் :** கார்த்திகா ராஜ்குமார் | **ஆசிரியர் குழு :** மைக் யெல், ஜெஸ்வின், ஜெசுதாஸ், வில்பார்ட், பென் அலெக்ஸ் | **வடிவமைப்பு :** பிரகாஷ்

*Facebook : **@kurutholai*** | ***For free PDF** copy Please Contact :* 97865 79362

*** எழுத்தாளர்களின் அனுமதியுடன் படைப்புகள் வெளியிடப்படுகின்றன.**

**** for private circulation only.***




✍ ஜான் நெல்சன்

# வாக்குத்தத்தம்

புதுவருடம் என்றாலே கிறிஸ்தவர்கள் மத்தியில் வாக்குத்தத்தைப் பற்றிய எதிர்பார்ப்பு என்பது சமீப காலத்தின் வாடிக்கையாகிவிட்டது. ஒவ்வொரு ஆண்டையும் முடிக்கும்போது நாம் கடந்து வந்த அனுபவங்கள் பெரும்பாலும் கசப்பானவைகளாகவும்/ நம்பிக்கை அற்றதாகவும் இருக்கிறபடியினால் இந்த எதிர்பார்ப்பு பெரும்பாலானவர்கள் மனதில் எதிர்பார்ப்பை உண்டு பண்ணுகிறது. இந்த மனோதத்துவ சவாலைப் பயன்படுத்தி புதிய ஆண்டு வாக்குத்தத்த விளம்பரங்கள் பளிச்சிட ஆரம்பிக்கின்றது. “எதைத் தின்றால் பித்தம் தெளியும்” என்ற மனநிலையில் உள்ள மக்களுக்கு இந்தத் தூண்டில் ஒவ்வொரு வருடமும் அவர்களின் கண்களை மறைக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். ஒவ்வொரு வருடத் துவக்கத்திலும் இந்த உலகம் எப்படி இருக்கும்; நம்முடைய வாழ்க்கை எப்படி இருக்கும் என்று வேதத்தில் நமக்கு சொல்லப்படா விட்டாலும், காலம் செல்லச்செல்ல உலகத்தின் நிகழ்வுகள் எப்படிப்பட்டதாய் இருக்கும் என்பதை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும், அப்போஸ்தலர்களும் எழுதி வைத்துள்ளதை நாம் உதாசீனப்படுத்துவதுதான் இத்தகைய மனப்பான்மைக்கு அடிப்படை காரணம். டிசம்பர் மாதம் 31ஆம் தேதி இரவு ஆலயத்துக்கு சென்று கடந்த வருடத்தை அலசி பார்த்து, புதிய வருஷத்தின் ஆரம்ப நிமிஷங்களில் கடவுளுடைய பிரசன்னத்தில் காத்திருப்பதோ, நன்றி செலுத்துவதோ தவறு கிடையாது. ஆனால், அது வாக்குத்தத்த ஆராதனை என்று அழைக்கப்படுவதைத் தான் இங்கே கேள்வி கேட்க வேண்டியுள்ளது. புதிய ஆண்டு நமக்கு எப்படி இருக்கும் என்பதை விடவும் நாம் புதிய ஆண்டில் எப்படி இருக்க போகிறோம் என்பதுதான் நமக்கு நாம் கேட்டுக் கொள்ள

வேண்டிய அடிப்படைக் கேள்வி. இதற்கு வேதப்பூர்வமாக வாக்குத்தத்தம் என்றால் என்ன என்பதை விளங்குவதுதான் பொருத்தமாக இருக்கும். எனவேதான் இந்த வேதபாடம்.

“தேவனுடைய வாக்குத்தத்தங்கள் எல்லாம் இயேசு கிறிஸ்துவுக்குள் ஆம் என்றும் ஆமென் என்றும் இருக்கிறதே” (2 கொரி.1:20). வாக்குத்தத்தம் என்கிற வார்த்தை மூலபாஷையில் பாதுகாப்பு, நம்பிக்கை, சமாதானம் என்ற பொருட்களை உள்ளடக்கியது. இந்த உலகம் பாதுகாப்பில்லாதது என்பது நாம் முதலில் அறிய வேண்டியது. பொருளாதாரத்திலும், அரசியலிலும், சமூக கட்டமைப்பிலும் இந்த உலகம் நமக்கு நம்பிக்கையைக் கொடுப்பதாக இல்லை. எல்லா மட்ட உறவுகளிலும் சமாதானக் குலைச்சலை நாம் அனுதினமும் பார்த்து வருகிறோம். ஒவ்வொரு ஆண்டும் இதனுடைய எதிர்மறைத் தாக்கம் சமூகத்தில் தலை தூக்கி நிற்கிறதே.



பூமிக்குரிய கூடாரமாக இந்த வீடு அழிந்து போகும் என்றும், இந்த பூமி அக்கினிக் கிரையாக வைக்கப்பட்டு இருக்கிறது என்றும் வேதம் ஆணித்தரமாக சொல்லுகிறது. இந்த உலகம் நாள்படப்பட நல்லதாக மாறும் என்று நாம் எதிர்பார்த்து நம்பிக்கை வைத்தால், மறுமை என்கிற உன்னதமான ஆசிர்வாதத்தை எதிர்பார்ப்பது மடமை ஆகிறதல்லவா? ஆகவே, வாக்குத்தத்தம் என்பது மேற்கூறிய மூன்று அம்சங்களையும் நமக்கு கொடுக்க வேண்டும். இந்த அடிப்படையிலேயே வாக்குத்தத்தையும் கட்டளைகளையும் வேதப்பூர்வமாக நாம் பிரித்தறிவது அவசியமாகிறது.

வேதத்தில் அநேகக் கட்டளைகள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. அவை மனிதனுடைய கீழ்ப்படியாமையையோ, கீழ்ப்படிதலையோ அடிப்படையாகக் கொண்டதாகும். உதாரணமாக, ‘என்னைக் கனம் பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன்’ என்று 1 சாமுவேல் 2:30ல் படிக்கிறோம். நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசிங்கியுங்கள்; இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களோடு கூட இருக்கிறேன் என்று உயிர்த்தெழுந்த ஆண்டவர் தமது சீஷர்களுக்கு கட்டளையிட்டதை மத்.28:20ல் வாசிக்கிறோம். இப்படி, இஸ்ரவேல் ஜனங்களுக்குத் தேசத்தைப் பற்றிய கட்டளைகளும், எல்லாருக்கும் பொதுவான கட்டளையாக வேதத்தில் நாம் வாசிக்கிறோம். கீழ்ப்படிந்தால் ஆசீர்வாதம்; கீழ்ப்படியாவிட்டால் தண்டனை என்பது கற்பனைகளைக் பொறுத்த அளவிலே சரியான அணுகுமுறையாக இருக்கும். ஆனால் கடவுளுடைய வாக்குத்தத்தை

பொறுத்த அளவிலே, மனிதனுடைய கீழ்ப்படிதலையோ, கீழ்ப்படியாமையோ சார்ந்தது அல்ல என்பதை நாம் வேதத்தின் பல இடங்களிலே படித்து அறிந்து கொள்ளலாம். வாக்குத்தத்தமே பாதுகாப்பையும், நம்பிக்கையும் சமாதானத்தையும் பற்றியதாயிருக்கும் போது, மனிதனுடைய கீழ்ப்படியாமையின் அடிப்படையில் அது சாத்தியமாகுமானால், கடவுளுடைய வாக்குத்தத்திற்கும் மனிதனுக்கும் எந்தக் காலத்திலும் எந்தத் தொடர்பும் இருக்க முடியாது. ஏனென்றால், விசுவாசிகளாகிய நம்முடைய கீழ்ப்படிதல்கூட முழுமையானதல்லவே.

ஆதி.3:15தான் முதலாவதும், பிரதானமானமுமான கடவுளுடைய வாக்குத்தத்தம் ஆகும். உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்'' என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி சொல்லப்பட்ட வாக்குத்தமே பிரதானமான வாக்குத்தத்தம். இதை வாக்குத்தத்தம் என்று கூட அநேகர் கருதுவதோ பிரசிங்கப்பதோ இல்லையே. கடவுள் தமது இரக்கத்தினால் தகுதியற்ற மனுகுலத்திற்கு ஈவாக அருளும் நன்மைகளே வாக்குத்தத்தம் ஆகும். இது மனிதனுடைய கிரியை சார்ந்தது அல்ல. அதைக் கடந்து கடவுளுடைய சர்வ வல்லமையுள்ள இரக்கத்தின் வெளிப்பாடேயாகும். அவருடைய வாக்குத்தத்தில் தீமையை விலக்கி விடுவதும், அதற்கு பதிலாக நன்மையைக் கொடுப்பதும் அடங்கியிருக்கிறது. ஒருவர் வாக்குத்தத்தம் பண்ணினால் அவருடைய சுபாவம் அதிலே வெளிப்படும் என்பதுதான் பொருள். கடவுள் கொடுக்கிற வாக்குத்தத்தில் அவருடைய சுபாவத்திற்கு முரண்பாடான அம்சங்கள் இருக்க முடியாது. பணம், பொருள், ஆஸ்தி, பதவி என்று கடவுளுடைய வாக்குத்தத்தை நிரந்தரம் இல்லாத பொருட்களோடு நாம் சம்பந்தப் படுத்தும் பட்சத்தில் அது கடவுளின் குணாதிசயத்திற்கு முரண்பட்டதாக இருக்கும் அல்லவா?

## சட்டப்பூர்வ வாக்குத்தத்தங்கள்

கடவுளுடைய பரிசுத்தமான கற்பனை

## சிந்திக்க சில வரிகள்

சில நேரங்களில், நம்முடைய பெரிய குற்றங்களை மறைக்க, அடுத்தவருடைய சிறிய குற்றங்களைப் பெரிதுபடுத்துகிறோமோ?

- deeRaj



களுக்கு மனிதன் கீழ்ப்படிய முடியாத நிலைமையில், மனந்திரும்பி சிலுவை யில் அறையப்பட்ட கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலமாக நாம் தேவனுடைய வாக்குத்தத்தைச் சுதந்தரிக்கும் பிள்ளைகளாக அங்கீகரிக்கப் படுகிறோம். "ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட் டன: சந்ததிகளுக்கு என்று அநேகரை குறித்துச் சொல்லாமல் உன் சந்ததி என்று ஒருவனைக் குறித்து சொல்லி இருக்கிறார், அந்த சந்ததி கிறிஸ்துவே" என்றும், "நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால் ஆபிரகாமின் சந்ததியராயும் வாக்குத் தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்" என்றும் பவுல் கலாத்திய சபைகளுக்கு எழுதியுள்ளார். (கலா. 3:14,29). மேலும், இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத் தினாலே பலிக்கிற வாக்குத்தத்தம் என்று 3:22ல் மேலும் நாம் வாசிக்கிறோமே. எனவே, தேவனுடைய கிருபையினால் விசுவாசத்தைக் கொண்டு மட்டுமே நாம் வாக்குத்தத்தைப் பெறுகிறோம்.

## சுவிசேஷ வாக்குத்தத்தங்கள்

கடவுளுடைய வாக்குத்தத்தங்களைப் பொறுத்த அளவிலே அது எனக்கும், என்னுடைய குடும்பத்துக்கும் மிஞ்சிப் போனால், என்னுடைய வட்டத்திற்கும் என்று கருதுவது வேதத்திற்கு புறம்பானது. கடவுளுடைய வாக்குத்தத்தங்கள் அது பன்மையில் இருக்கிறதை நாம் பார்க்கிறோம். "நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத் தத்தம்" (1 யோவா.2:25). இதைத்தான் சுவிசேஷ வாக்குத்தத்தங்கள் என்று சொல்லுகிறோம். அதாவது, நாம் தொடர்ந்து கடவுளுடைய ஆசீர்வாதங்களைப் பிரயோகிக்கும்போது தேவன் மேலும் மேலும் பாதுகாப்பின் நிச்சயத்தையும், பொறுமையுடன் கூடிய நம்பிக்கையையும், சமாதானத்தின் பெருக்கத்தையும் கட்டளை யிடுகிறார்.

மேற்கூறிய இரண்டு வகை வாக்குத் தத்தங்களும் நாம் கடவுளுடைய குணாதிசயத்தில் அதாவது, திவ்ய சுபாவத்தில் பங்குள்ளவர்களாகும் பொருட்டு கொடுக்கப்பட்டுள்ளது என்று பேதுரு தன்னுடைய நிருபத்தில் எழுதியுள்ளார். "தம்முடைய மகிமையினாலும் காருண்யத் தின் நாளும் நம்மை அழைத்தவரே அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தெய்வ பக்தி க்கும் வேண்டிய யாவற்றையும் அவருடைய திவ்ய வல்லமையானது தந்தருளினதுமன்றி, இச்சையினால் உலகத்துக்கு உண்டான கேட்டுக்கு தப்பி திவ்யசுபாவத்துக்கு பங்குள்ளவர்களாகும் பொருட்டு, மகா மேன்மையும், அருமையு மான வாக்குத்தத்தங்களும் அவைகளி னால் நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது".(2 பேது.2:3,4). துரதிஷ்டவசமாக, இன்று தங்களுடைய சுயஇச்சைளை நிறைவேற்று வதற்காக வாக்குத்தத்தங்களைத் தேடி ஓடுகிற கூட்டமாக கிறிஸ்தவ சமுதாயம் மாறிவிட்டது.

## வாக்குத்தத்தத்தின் பாதிப்புகள்

- நமது நம்பிக்கையை பொறுமையு டன் இது பெருகச் செய்கிறது.
- விசுவாசத்தில் வளர்வதற்கு வாக்குத் தத்தம் நமக்கு ஊன்றுகோலாக இருக்கிறது.
- ஜெபத்தில் நாம் உறுதியாய் நிலைத் திருக்க வாக்குத்தத்தம் நமக்கு துணை செய்கிறது.



# வாழ்க்கைப் பயணம்

(Rev. Dr. J. N. மனோகரனின் உயிரூட்டும் மன வெளிச்சம்)

ஏதாவது இலக்கை நோக்கி நகரும்போது, ஒரு பதட்டம் ஏற்படுகிறது. நாம் இலக்கை அடையும்போது வழியில் உள்ள மைல்கற்களின் எண்ணிக்கை குறைகிறது, அதுமாத்திரமல்ல மறைந்தும் விடுகிறது. வாழ்க்கையைக் கல்லறையை நோக்கிய பயணம் (முட்டுச்சந்து) என்று எண்ணுபவர்கள் பலர் உள்ளனர். இருப்பினும், கிறிஸ்தவர்கள் வேறுபட்ட கண்ணோட்டத்தைக் கொண்டுள்ளனர். வாழ்க்கை என்பது பரலோகத்தை நோக்கிய யாத்திரை. வாழ்க்கை என்பது ஆண்டவரும், இரட்சகருமான சிருஷ்டிகரோடு என்றென்றும் வாழ்வதற் கான ஆயத்தமாகும்.

ஒரு வாழ்க்கைப் பயணம் எப்படி இருக்க வேண்டும், பூமிக்குரிய வாழ்க்கையின் முடிவு எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு ஏனோக்கு ஒரு சிறந்த உதாரணம். “ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருக்கையில், காணப் படாமற்போனான்; தேவன் அவனை எடுத்துக் கொண்டார்” (ஆதியாகமம் 5:24). இது வாழ்க்கையின் அழகான சுருக்கம். வாழ்க்கைப் பயணத்தில் நாம் தேவனோடு நடந்தால், அவரது நித்திய இல்லத்திற்கு அவராலே அழைத்துச் செல்லப்படுவோம்.

## உங்கள் வீட்டை ஒழுங்குபடுத்துங்கள்:

எசேக்கியா ராஜாவிடம் கர்த்தர் ஏசாயா மூலம் பேசினார். அவருடைய மரணம் நெருங்கிக்கொண்டிருந்தபோது, ‘அவர் வீட்டுக் காரியத்தை ஒழுங்குப்படுத்த கட்டளை யிடப்பட்டார் (2 இராஜாக்கள் 20:1). ஆனால்


அதற்கு எசேக்கியா விருப்பப்படாததினால், மேலும் பதினைந்து வருடங்கள் தனது வாழ்நாளை தேவனிடம் மன்றாடி நீட்டித்துக் கொண்டார், துரதிர்ஷ்டவசமாக அந்த நேரத்தில் அவர் யூதாவின் மிகவும் பொல்லாத ராஜாவான மனாசேயைப் பெற்றெடுத்தார். நாம் இவ்வுலகை விட்டு வெளியேறும்போது, பல விஷயங்களை நாம் விட்டுவிட வேண்டும் அல்லது மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும். கடைசி நிமிடங்கள் வரை தாமதிக்காமல், கொடுக்க வேண்டியதை கொடுத்து விட்டு, நல்ல தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் வாழ்க்கையை அனுபவிக்க வேண்டும்.

## உங்கள் தேவனைச் சந்திக்க தயாராகுங்கள்:

ஆமோஸ் இஸ்ரவேல் தேசத்திடம் தேவனைச் சந்திக்க ஆயத்தமாக இருக்குமாறு அறிவுறுத்தினார் (ஆமோஸ் 4:12). ஆம், நித்தியத்தில் அவருடன் வசிப்பதற்காகத் தேவனைச் சந்திப்பதற்கு ஆயத்தமாகுதல் மிக அவசியம். இன்னும் சொல்லப் போனால், தேவனும் நமக்காக ஒரு இடத்தையும் ஆயத்தம் பண்ணுகிறார் அல்லவா? (யோவான் 14:1).

## முன்னுரிமை:

ஒரு ஓட்டப்பந்தய வீரர் நீண்ட தூர ஓட்டத்தில் இறுதிக் கோட்டை நெருங்கும் போது கடைசி குறுகிய தூரத்தை வேகமாக ஓடி கடக்கிறார் அல்லவா? வாழ்க்கையில், உடல் செயல்பாடுகளின் அடிப்படையில் வேகமாக இயங்குவது சாத்தியமில்லாமல் இருக்கலாம். ஆயினும்கூட, தேவனின் கட்டளையையும் மற்றும் தேவராஜ்ய பணிகளையும் நிறைவேற்ற ஆவிக்குரிய, ஊழியம் மற்றும் அறிவுசார் வளங்களைப் பயன்படுத்துவது நல்லது.



## நோக்கமான ஜெபம்:

சரீர மற்றும் வெளிப்புற செயல்பாடுகளுக்கான வாய்ப்பு குறைவாக இருந்தால், அதிக ஜெபங்களைச் செய்யலாம்.

கிருபையுடனான முதுமையைப் பெறுவது ஒரு கிறிஸ்தவ நற்பண்பு மற்றும் மதிப்பு.

எனது நித்திய இல்லத்திற்காக நான் கிருபையுடனும் மகிழ்ச்சியோடும் காத்திருக்கிறேனா?

Website: https://tamilbiblesearch.com/
https://4gtmovement.com/
YouTube: https://www.youtube.com/channel/UCdNUYdMJIiyEgq-A6vqtgog
WhatsApp: +91 9444027221





# சூசன்னா வெஸ்லி

✍ நிருபா யேசுவடியான்

18-ம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் வாழ்ந்த வெஸ்லி குடும்பம் அருட்பணியில் அதிக நாட்டம் கொண்ட குடும்பம். சாமுவேல் வெஸ்லி ஒரு போதகராகப் பணி செய்து வந்தார். சூசன்னா வெஸ்லி இல்லத்தரசியாக வாழ்ந்து வந்தார். தேவன் அவர்களுக்கு 19 பிள்ளைகளைக் கொடுத்தார். அதில் 10 பேர் மட்டுமே பிழைத்துக் கொண்டனர். சூசன்னா அயராத ஒரு ஜெப வீராங்கனையாக இருந்தார். தன்னுடைய வீட்டு வேலைகளை எல்லாம் காலமே முடிந்து விட்டு, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பிள்ளைகளுக்காக தேவனிடம் ஜெபிப்பது அவரது வழக்கமாக இருந்தது. தன்னுடைய பத்து பிள்ளைகளும் தேவனின் திராட்சைத் தோட்டத்தின் பணியாளர்களாக வாழ வேண்டும் என விருப்பம் கொண்டார். சரித்திரத்தைத் திரும்பிப் பார்த்தால் தேவன் சூசன்னாவின் ஜெபத்திற்குப் பதிலளித்ததை நாம் பார்க்க முடியும். இங்கிலாந்து தேசத்தின் எழுப்புதலுக்கு சூசன்னாவின் இரண்டு பிள்ளைகளான ஜான் வெஸ்லி மற்றும் சார்லஸ் வெஸ்லி முக்கியமானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கணவர் சாமுவேல் வெஸ்லி மரித்த பின் தன் 10 பிள்ளைகளையும், சூசன்னா தனிமையாகப் பொறுப்போடு வளர்த்து வந்தார். அநேக சவால்களையும், போராட்டங்களையும் சந்தித்தார். இரண்டு முறை அவருடைய வீடு தீப்பற்றி எரிந்தது. சூசன்னாவின் ஜெபத்தினால் குழந்தைகள் காக்கப்பட்டனர். கணவர் சாமுவேல் வெஸ்லி ஊழியம் செய்ததினிமித்தம் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார். அண்டை வீட்டார் துன்புறுத்தினார்கள். வீட்டுத் தோட்டத்தை நாசம் செய்தனர். அவர்கள் வளர்த்து

வந்த பசு மாடுகளைக் கத்தியால் குத்திக் கொன்றனர். இதனால் சரியான உணவில்லாமல் பிள்ளைகளின் உடல் பாதிப்படைந்தது. இப்படி அடுக்கடுக்காகப் பல துன்பங்கள் வந்து குவிந்த போதிலும், இத்தாயார் விசுவாசத்தை விட்டுவிடாமல், முழங்கால்களை ஊன்றி ஆண்டவரிடம் ஜெபிப்பதில் உறுதியாக இருந்தார்.

தன் பிள்ளைகளைக் கிறிஸ்துவுக்காக வளர்த்தது மட்டுமல்லாமல், அருகிலுள்ள பிள்ளைகளுக்கும் இயேசுகிறிஸ்துவைப் பற்றி கூறினார்கள். அவர்களுக்கு வேதத் திலிருந்து வசனத்தைச் சொல்லிக்கொடுத்து, அவர்களோடு ஜெபித்து வந்தார்கள். இயேசுகிறிஸ்துவின் அன்பைப் பற்றியதான கடிதங்களை எழுதிக்கொடுத்து அப்பிள்ளை களை வாசிக்க ஊக்குவித்தார்கள். சுமார் 200 குழந்தைகள் இந்த வேதாகமப் பள்ளியில் இணைந்து கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார்கள். தன்னுடைய பிள்ளை களையும் கிறிஸ்தவ ஒழுக்கத்திலும், பக்தியிலும் வளர்த்து வந்தார்கள். “பிள்ளைகளுக்குச் சேவை செய்வதே என் ஆசை. அதற்காகத்தான் நான் இந்த உலகத்தில் இருக்கிறேன் என்று கூறுகிறார்கள். பிள்ளைகள் கிறிஸ்துவுக்குள் வளர, ஒவ்வொரு நாளும் கடைபிடிக்க வேண்டிய சட்டங்கள் பலவற்றை அவர்கள் பின்பற்ற வேண்டியிருந்தது. என்றாலும் பிள்ளைகளும் அதற்கு இசைந்து கட்டுப்பட்டு வளர்ந்தனர்.

சூசன்னா தன் நாட்களை அன்பு மகன் ஜான் வெஸ்லியுடன் வாழ்ந்து கழித்து வந்தார். ஒரு முறை கிறிஸ்தவ இயக்கம் ஒன்று, ஜான் வெஸ்லியை செவ்விந்தியர்கள் மத்தியில் ஊழியம் செய்ய வட அமெரிக்கா செல்ல அழைப்பு கொடுத்தனர். ஜான் வெஸ்லியோ தன் தாயார் விதவை என்றும் அவரை விட்டுவிட்டு தான் செல்ல முடியாது என்றும் திட்டவட்டமாகக் கூறி விட்டார். தன் தாயாருக்குத் தான் ஆறுதலும், ஊன்று

## சிந்திக்க சில வரிகள்

**நாம் நம்பும் விஷயங்களை மட்டுமே பேசினால், செய்தால், நமக்குள் குழப்பம் வராது. அடுத்தவர்களை திருப்திப்படுத்துவதற்காக, நாம் நம்பாத ஒன்றைப் பேசினாலோ செய்தாலோ, குழப்பமே நிலவும்.**

**- deeRaj**





கோலுமாக இருப்பதாக கூறினார். அந்த இயக்கத்தின் ஊழியர்கள், வெஸ்லியிடம் ஒருவேளை உங்கள் தாயார் சம்மதம் தெரிவித்தால் செல்வீர்களா? என்று கேட்டார்கள். ஜான் வெஸ்லி அப்படியொரு காரியம் நிகழ சாத்தியமே இல்லை என்று தன் மனதில் நினைத்துக்கொண்டு, என் தாயார் சம்மதம் தெரிவித்தால் நிச்சயம் செல்வேன் என்றார். இயக்கத்தின் ஊழியர்கள் சூசன்னா வெஸ்லியிடம் இதைப் பற்றி கலந்தாலோசித்தார்கள். சூசன்னாவின் பதில் வரலாற்றில் இடம்பெறும் வகையில் இருந்தது. “எனக்கு 20 பிள்ளைகள் இருந்திருந்தால், அவர்கள் அனைவரும் கர்த்தருடைய சேவையில் இருந்தால், நான் அவர்களை மீண்டும் பார்க்க முடியாமல் போகலாம் என்றாலும் நான் மகிழ்ச்சி அடைவேன்” என்றார்கள். தன்னுடைய வயதான காலத்திலும் சூசன்னாவின் மிஷனெரி பாரம் குறையவே இல்லை. தனக்கு ஆறுதலாய் இருந்த ஜான் வெஸ்லி தேவ அழைப்பை ஏற்று தூர தேசத்திற்கு மிஷனெரியாகச் செல்ல அவர் தடையாக இருக்கவே இல்லை. ஜான் வெஸ்லி முதலில் ஜார்ஜியா தேசத்திற்கு கடந்து சென்று ஊழியம் செய்தார். அதன் பின்பு தேவன் இவரை வித்தியாசமாக பயன்படுத்த ஆரம்பித்தார்.

இவரது மற்றொரு மகன் சார்லஸ் வெஸ்லி நாம் பாடும் பல பாமாலைப் பாடல்களை இயற்றினார். இருவரும் மெதடிஸ்ட் திருச்சபையை உருவாக்கி இங்கிலாந்தின் ஆவிக்குரிய மறுமலர்ச்சிக்கு காரணமாக இருந்தனர். ஜான் வெஸ்லி தன் வாழ்நாட்களில் மொத்தம் 40,000 பிரசங்கங்களைச் செய்திருக்கிறார். 15 மொழிகள் பேசக் கூடிய ஞானத்தை தேவன் இவருக்குக் கொடுத்தார். இதற்கு முக்கிய காரணம் சூசன்னா வெஸ்லியின் ஜெபமே! ‘மெதடிஸ்ட் சபையின் தாயார்’ என அழைக்கப்பட்ட சூசன்னா வெஸ்லி தன் முழங்காலினாலேயே தன் பிள்ளைகளை வளர்த்தார்.

அன்பு பெற்றோரே, இன்று நம் பிள்ளைகளைக் குறித்த நம்முடைய ஆசை எப்படி உள்ளது? உலகில் எவ்வாறு வெற்றி பெறுவது என்பதை மட்டுமே அவர்களுக்குக் கற்று கொடுக்கிறோமா? அல்லது தேவ இராஜ்யத்தின் பணிகளைக் குறித்து கற்றுக் கொடுக்கிறோமா? நம் பிள்ளைகள் மூலம் கிறிஸ்துவின் நாமம் மகிமைப்படுகிறதா?



சிரில்

# மாயமான நினைவுப் பொருட்கள்

நினைவுப் பொருட்கள் பல நம் கடந்தகாலத்தைப் பற்றிய நம் உணர்வுகளைத் தூண்டி எழுப்புகிறவைகளாக இருக்கும். அந்தக்காலத்தில் நம் பெற்றோர், உறவினர், நண்பர்கள் அனுப்பிய வாழ்த்து அட்டைகள், சிறு பரிசுகள், நமக்குக் கிடைத்த பரிசுப்பணத்தைச் சேமித்து வைத்து நாம் வாங்கிய முதல் பொம்மை, இவைகளில் பழைய பேப்பர், ப்ளாஸ்டிக், தகரம், இரும்புக்கு பேரீச்சம்பழம், ப்ளாஸ்டிக் பொருட்களைத் தருபவர்களைத் தாண்டி தப்பி இருக்கும் சில உங்கள் வீட்டில் இருக்கலாம்.

இந்தத் தலைமுறையினரிடம் வாழ்த்து அட்டைகள் இல்லாத ஒரு தாளில், மாயம் போன்ற தூரிகையால் வரையப்பட்டு வானவெளியில் அனுப்பப்பட்டு, மேகத்தில் சேமித்து வைக்கப்படுகிறது. சேமிக்க இடம் இல்லாதபோது, தரவிறக்க டேட்டாவும் நேரமும் இல்லாதபோது இல்லாமலேயே போய்விடுகின்றன. இசையோ திரைப்படமோ அனைத்தும் நம் கையால் தொட்டுப்பார்க்க முடியாமல் இருக்கின்றன. நாம் அனுப்பும் பணமும் கைமாறாமலேயே கணக்குகளுக்கு மாற்றப்படுகின்றன.

பபுள் கம் மென்றதுபோல குட்டிக்குட்டி வீடியோக்கள் பார்த்து வயிறு நிறையாமல் தாடைகள் வலிக்கின்றன. இந்தச் சூழலில் அடுத்த தலைமுறைகளுக்குத் தொட்டுப்பார்த்து நினைவுகூர மனிதர்கள் மட்டும்தான் இருப்பார்கள். அவர்களும் உலகைவிட்டுப் போகும்போது இந்த உலகமும் தனிநபரும் மட்டுமே இருப்பார்கள் என்று நினைத்துப் பார்க்கையில் உடலும் மனமும் சிலிர்க்கிறது. மறு உலகமாகிய மோட்சம் தொட்டு உணரும் வகையில் இருக்குமா? உயிர்த்த இயேசுவின் மறுரூப உடல் நமக்குக் கிடைத்தால் ஒருவரை ஒருவர் தொட்டு உணர முடியுமா? ஒருவேளை நாம் இருக்கும் இந்த உலகத்தையே கர்த்தர் மறுசுழற்சி செய்தால், நம் மதிப்புக்குரிய நினைவுப் பொருட்கள் அங்கே இருக்குமா? இன்று நம்முடன் இருக்கும் உறவுகளையும் பொருட்களையும், அவரவர்க்கான அது அதற்கான இடத்தில் வைப்போமா?

## இயேசு கேட்ட கேள்விகள் 21



சேவியர்

# நீங்கள் உங்கள் மரபின் பொருட்டுக் கடவுளின் கட்டளையை மீறுவது ஏன்? (மத்தேயு 15: 3)

யூதர்கள் சட்டங்களுக்கும், மரபுகளுக்கும் மிக அதிக முக்கியத்துவம் கொடுப்பவர்கள். அதற்கு ஒரு காரணம் உண்டு. கடவுளின் கட்டளைகளை மீறி நடந்ததால்தான் அவர்கள் நாட்டை விட்டு அடிமைகளாய் வெளியேற்றப்பட்டார்கள் என்றும், இஸ்ரேலின் அழிவுக்கும் சிதைவுக்கும் காரணம் கடவுளின் கட்டளைகளை மீறி நடந்ததே என்றும் அவர்கள் புரிந்து கொண்டார்கள். எனவே மோசேயின் கட்டளைகளைவிட அதிகமான கட்டளைகளை அவர்கள் தங்களுக்குள் இட்டுக் கொண்டார்கள். காலப்போக்கில் அவை அர்த்தமிழந்து வெறும் சடங்குகளாய் மாறிப் போயின.

அதன் ஓர் உதாரணம் கைகளைக் கழுவி விட்டு உண்ணும் மரபு. மோசே கைகளைக் கழுவ வேண்டும் எனும் கட்டளையைக் கொடுத்தார். கூடாரங்களில் வாழும் மக்கள் நோய் நொடியில்லாமல் இருக்க வேண்டும் என்பதற்காக அந்தச் சட்டத்தை அவர் கொண்டு வந்தார். அந்தச் சட்டத்தின்படி தீட்டான

எதையாவது தொட்டால் அவர்கள் தங்களைச் சுத்திகரிக்க வேண்டும். அப்படித் தூய்மைச் சடங்குகளுக்காய் வைத்திருந்த தொட்டியில்தான் இயேசு தண்ணீரைத் திராட்சை இரசமாய் மாற்றி அவர்களின் சடங்குகளுக்குச் சம்மட்டி அடி கொடுத்திருந்தார்.

தானாக இறந்து கிடக்கும் விலங்குகளில் தீய ஆவி புகுந்து கொள்ளலாம், அதை உண்பவர்களை அது ஆக்கிரமித்துக் கொள்ளும் என்று அவர்கள் நம்பினார்கள். விலங்குகளை வெட்டி அதன் இரத்தம் முழுமையாய் வடியவேண்டும், அதன்பின்பே உண்ண வேண்டும் என்றார்கள். காரணம் இரத்தத்தில் உயிர் இருக்கிறது என நம்பினார்கள். பன்றி, முயல் போன்றவற்றை அவர்கள் உண்பதில்லை. பன்றியின் இறைச்சியை உண்பதும், கொடுமையான விபச்சாரப் பாவமும் ஒரே அளவையால் அளவிடக் கூடியது என அவர்கள் நம்பினார்கள். அதேபோல எகிப்து போன்ற இடங்களில் புனித விலங்குகளாய் இருக்கும் பூனை, முதலை போன்ற விலங்குகளை இவர்கள் தீட்டாகவே கருதினார்கள்.

தீட்டானது என்று சொல்லும்போது இறந்து போன உடல்கள், இரத்தப்போக்குடைய பெண்கள், பிரசவம் முடிந்த சில நாட்களே ஆன பெண்கள் என பலவற்றை அவர்கள் வைத்துக் கொண்டார்கள். இந்தப் பட்டியல் காலப்போக்கில் அதிகமானது. பிற இன மக்களைத் தொடுவது, அவர்களைத் தொட்டவர்களைத் தொடுவது எனப் பல அடுக்குகளாய் விரிவடைந்தது. உதாரணமாக, ஓர் எலி ஒரு பாத்திரத்தைத் தொட்டுவிட்டால், அது எவ்வளவு பெரிய பாத்திரமாய் இருந்தாலும் அது தீட்டானதாகி விடுகிறது. அதில் இருக்கின்ற பொருட்கள் எல்லாம் தீட்டாகி விடுகின்றன. அந்தப் பொருட்களைத் தொடுபவர்கள் எல்லோரும் தீட்டாகி விடுகின்றனர். அப்படித் தீட்டானவர்களைத் தொடுபவர்கள், அவர்களைத் தொடுபவர்கள் என எல்லோரும் தீட்டாகிவிடுகின்றனர்.

அவ்வளவும் ஏன்? தீட்டான மக்கள் நடந்து செல்லும் புழுதியில் நடந்து செல்பவர்கள்கூட தீட்டாகி விடுகின்றனர். இப்படியெல்லாம் சட்டத்தை அடுக்கடுக்காய் போட்டு அவற்றைக் கடவுளின் கட்டளைக்கு மேலாகவே வைத்தார்கள். அப்படிப் பார்த்தால், பொது வெளியில் சென்று வருகின்ற எவரும் தங்களைத் தூய்மைப்படுத்த வேண்டும். ஏதோ ஒரு தூசு தீண்டத்தகாதவரைத் தீண்டிவிட்டு நம்மைத் தீண்டியிருக்கலாம் எனும் சிந்தனையே அதன் காரணம். இவையெல்லாம் கடவுளின் கட்டளையல்ல, மக்கள் உருவாக்கிய மரபு.

அதன் அடிப்படையில் உணவு உண்ணும் முன் எல்லோரும் கை கழுவ வேண்டும். கை கழுவுவதற்கும் அவர்கள் ஒரு குறிப்பிட்ட வழியை வைத்திருந்தார்கள். இரண்டு கைகளையும் குவித்து, பத்து விரல்களும் வான் நோக்கி இருக்குமாறு வைக்க வேண்டும். தண்ணீரை எடுத்து விரல்களின் நுனியில் ஊற்ற வேண்டும். அந்த தண்ணீர் வழிந்து, உள்ளங்கை வழியாய், மணிக்கட்டை நனைத்து முட்டியின் வழியாய் வெளியேறும். அத்துடன் முடிந்து விடாது. விரலின் நுனியிலுள்ள தீட்டு, தண்ணீரில் கலந்து கைகளில் இப்போது வந்திருக்கும். எனவே விரல்களை பூமியை நோக்கி நீட்டி

விட்டு, மீண்டும் ஒரு முறை தண்ணீரை ஊற்ற வேண்டும். அதன் பின் இரண்டு கை முட்டிகளால் துடைத்துக்கொள்ள வேண்டும்.

இந்த மரபைத்தான் இயேசுவின் சீடர்கள் பின்பற்றவில்லை. அவர்கள் வந்தார்கள், சாப்பிட அமர்ந்தார்கள், சாப்பிட்டார்கள். எப்படியாவது இயேசுவைப் பொறிவைத்துப் பிடிக்க வேண்டும் என வந்திருந்த பரிசேயரும் மறைநூல் அறிஞர்களும் இயேசுவுக்கு நேராய் குற்றச்சாட்டை நீட்டினார்கள். இவர்கள் எருசலேமிலிருந்து கலிலேயாவிற்கு நீண்ட தொலைவு நடந்து இயேசுவைக் குற்றம் சாட்ட வந்திருந்தவர்கள். அவர்கள் சீடர்களிடம், "நீங்கள் ஏன் கை கழுவவில்லை" எனக் கேட்கவில்லை. இயேசுவிடம் கேட்டார்கள்: ஏன் 'உமது சீடர்கள்' கைகளைக் கழுவுவதில்லை. அவர்கள் ஏன் மூதாதையரின் மரபுகளை மீறுகிறார்கள்!

இது இயேசுவுக்கும், பரிசேயர்களுக்கும் இடையேயான நேரடி மோதல். இது சட்டத்தின் பார்வைக்கும், கடவுளின் பார்வைக்கும் இடையேயான நேரடிச் சவால். இது மரபுகளுக்கும், இறைமைக்கும் இடையேயான மல்யுத்தம். இயேசுவின் சீடர்கள் செய்தது தவறு என பரிசேயர்கள் மிகக் கடுமையாய் கூறுகிறார்கள். மரபு என்பது அவர்களுடைய மரபணுக்களில் கல்வெட்டுபோல பதிந்துள்ள விஷயம். அதை அவர்கள் எதற்காகவும் தளர்த்துவதில்லை. இரண்டு பார்வைகளில் ஒன்றுதான் நிலைக்க முடியும், இரண்டுமே நிலைக்க முடியாது.

மரபுகளால் பூசப்பட்டவர்கள் கை கழுவுவது தூய்மையாய் சாப்பிடுவதற்கு அல்ல. சடங்குகளை நிறைவேற்றுவதற்காக. நல்ல சமாரியன் உவமையில் ஏன் குருவும் லேவியும் விலகிப் போனார்கள்? அவர்கள் மரபுகளை மீற விரும்பவில்லை. மரபுகளை மீறினால் மீண்டும் தூய்மையாக்கும் முன் அவர்கள் ஆண்டவரைத் தொழ முடியாது! இந்தத் தீண்டாமையின் பல வடிவங்களை நாமும் நமது வரலாற்றிலிருந்து புரிந்துகொள்ள முடியும்.

பரிசேயர்களின் கேள்வி ஆத்மார்த்தமானது. தாங்கள் நம்பியிருக்கும் மரபை எப்படி இவர்கள் மீறலாம். மீறினால் எப்படி இவர்கள் ஆன்மிகவாதிகளாய் இருக்க முடியும் என்பதே அதன் தொனி. இயேசு அவர்களுக்குப் பதில் சொல்லவில்லை. ஏன் கை கழுவவில்லை தெரியுமா என விளக்கம் கொடுக்கவில்லை. அப்படித்தான் செய்வோம் என எதிர்த்துப் பேசவில்லை. மாறாக ஞானத்தினால் அவர்களைத் துவைத்து எடுக்கிறார்.

உங்கள் மரபின் பொருட்டு, கடவுளின் கட்டளையை ஏன் மீறுகிறீர்கள்? தந்தையும் தாயையும் மதித்து நட என்பது கடவுளின் கட்டளை. தந்தையையோ, தாயையோ பார்த்து உமக்குத் தரவேண்டியது கடவுளுக்குக் காணிக்கையாயிற்று என்று சொன்னால், தாய் தந்தையரைக் கவனிக்க வேண்டாம் என மரபை உருவாக்குகிறீர்கள். உங்கள் மரபினால் ஏன் இறைவனின் கட்டளையை மீறுகிறீர்கள்? என்று கேட்டார். அவர்கள் திணறிப் போனார்கள். அவர்களிடையே அந்தப் பழக்கம் இருந்தது. உமக்கானது கடவுளுக்குக் காணிக்கையாகிவிட்டது என அவர்கள் சொல்வதை கடவுளோடு கொள்ளும் நேர்ச்சையாய்க் கருதினார்கள். நேர்ச்சையை உடைக்கக் கூடாது எனும்

இறைவார்த்தையைத் துணைக்கு அழைத்தார்கள். இயேசு அவர்களுடைய சுயநல சிந்தனைகளையும், சித்தாந்தங்களையும் அறிந்திருந்தார். எனவே அந்த மரபை உடைத்தெறிந்தார்.

மரபுகளை உடைத்த அவர், 'மனிதனின் உடலுக்குள் செல்வது அவனைத் தீட்டுப்படுத்தாது, அவனது வாயினின்று வெளிவரும் உள்ளத்தின் தீய எண்ணங்களே அவனைத் தீட்டுப்படுத்தும்' என்றார். இதன் மூலம் மோசே சொன்ன பட்டியல் கணக்கான உணவுச் சட்டங்களையும் அவர் செல்லாக் காசாக்குகிறார். லேவியராகமத்தின் பல பக்கங்களைக் கிழித்து எறிகிறார். காகிதத்தில் எழுதப்பட்டவற்றுக்கும், இதயத்தில் எழுதப்பட வேண்டியதற்குமான போராட்டமாய் அவரது பதில் இருந்தது. வெறும் சட்டங்களைப் பிடித்துத் தொங்காதே, வெறும் மரபுகளின் மடியில் வாழாதே, இதயத்தால் அனைத்தையும் உணர்ந்து வாழ் எனும் புதிய சிந்தனையை அவர் தருகிறார்.

தினமும் கோயிலுக்குப் போவது, பைபிளை வாசிப்பது, பைபிள் வகுப்பில் கலந்து கொள்வது, பாடகர் குழுவில் கலந்து கொள்வது, சர்ச் குழுக்களில் இருப்பது, ஒரு குறிப்பிட்ட வகையில் ஆடை அணிவது, ஒரு குறிப்பிட்ட ஆராதனை முறையை வைத்திருப்பது, குறிப்பிட்ட விழாக்களை நடத்துவது, குறிப்பிட்ட பெயர்களால் அழைத்துக் கொள்வது, குறிப்பிட்ட முறையில் திருமுழுக்கு பெறுவது இப்படி நாம் கொண்டிருக்கும் மரபுகள் எக்கச்சக்கம். எல்லாவற்றையும் விட முக்கியமானது நமக்கும் கடவுளுக்குமான உறவுப் பிணைப்புதான். அவர் கற்றுக் கொடுத்த மனிதநேயப் பண்புகள்தாம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

மரபுகள் வெளிப்படையான சடங்குகளின் அடையாளம். அவற்றைக் கொண்டு இதயத்தை அளவிட முடியாது. இதயத்தில் தூய்மையுடையவர்களே பாக்கியவான்கள், அவர்களே கடவுளைக் காண்பார்கள். அவர்களே கடவுளுக்கு ஏற்புடைய வாழ்க்கையை வாழ்வார்கள். மற்றவர்கள் வெளிப்படையாய் எல்லாவற்றையும் செய்து விட்டு, உள்ளுக்குள் வன்மத்தையும் வெறுப்பையும் பகையையும் வளர்க்கும் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளாய் மாறிப் போவார்கள்.

நாம் மரபுகளைப் பின்பற்றுவது முக்கியமல்ல, இறைவனின் கட்டளையான இதயத்தில் தூய்மையைக் கொண்டிருப்பதே முக்கியமானது! இறைவனை நெருங்கத் தடையாக இருக்கும் மரபுகளை நிராகரித்து அவரை நெருங்குவோம். ■■■

## சிந்திக்க சில வரிகள்

**நம்மை வெறுத்து ஒதுக்கும் மனிதர்களை அமைதியாகக் கடந்து போகப் பழகுவதும், ஒரு வகையான முதிர்ச்சியே!**

**- deeRaj**





# மானுட மாண்புகள்



முனைவர் கி.சுமதி

“எப்போதும் யாரையாவது குறை சொல்றீங்க அல்லது திட்றீங்க”

“எதிலும் உங்களுக்கு நம்பிக்கை இல்லை”

“எல்லாமே உங்களுக்கு ஐயப்பாடுதான்”

“உங்களுக்கு ஏன் யாரையுமே பிடிப்பதில்லை”

“வயசானாலே இப்படித்தான்”

“எல்லாவற்றிலும் ஏதாவது குற்றம்”

“உங்க கண்ணுக்கு யார்தான் சரி”

“2022 இலும் இப்படித்தான்..... 2024 இலும் இப்படித்தான் இருப்பீங்களா”

“இளைஞர்களின் மனநிலை ஏன் உங்களுக்குப் புரியவில்லை”

கோயிலுக்குப் போனாலும் குறைதான் சொல்றீங்க”

“அரசாங்கம் தப்பு...... வாத்யார் சரியில்லை”

“பாடத்திட்டம் சரியில்லை”

“மாணவர்கள் மனோபாவம் சரியில்லை”

“சம்பளம் போதவில்லை”

“டிக்கெட் விலை ஏறிவிட்டது”

"EB மீட்டர் சரியில்லை"

"ரோடு சரியில்லை"

"நியூஸ் பேப்பர்ல நியூஸ் தப்பு"

"T.V சரியான தகவலைத் தருவதே இல்லை"

"டூரிஸ்ட் ஸ்பாட் சுத்தமில்லை"

"பால் விலை ஏறிடுச்சி, ஆனா பால் தண்ணி"

"இந்த கால அரிசியில சத்தே இல்லை"

"ரேஷன் பருப்பு வேகவே வேகாது"

"ரேஷன் எடை தப்பு"

"டாக்டர் பீஸ் அதிகம்"

எண்ணையில கலப்படம்.....

மீடியாக்கள் அபத்தம்.....

இந்த கால நடிகர்களிடம் நடிப்பே இல்லை......

தியேட்டர்ல ஏசி போட்டாலும் கொசு.... மூட்டைப்பூச்சி......

ரோடு குழியும், பள்ளமும் மேடாவும் இருக்கு....

எல்லா அரசியல் வாதியும் வீடு கட்டிட்டாங்க

TAX அதிகமாயிடுச்சி......

விலை வாசி விஷமா இருக்கு....

சலுகைகள் கண் துடைப்பு.......

இலவசம்....... அதுவும் ஒரு ஏமாற்று வேலைதான்.....

ஏர் போர்ட்டைப்பாரு.... ரைல்வே ஸ்டேஷன் மாதிரி கூட்டம்

"கோர்ட் கோர்ட்டாவா இருக்கு?

"நியாயம் எங்கே சார் இருக்கு?

"நம்ப ஊர் கெட்டுப்போச்சு...."

"எங்கே இருக்கு ஈனம், மானம் எல்லாம்?

யாருக்காவது இங்க மனக்கணக்கு தெரியுமா?

கால்குலேட்டரை எவன் கண்டுபிடிச்சான்?

கூகுல்ல இருக்கிறது எல்லாம் கரெக்டா....

காலம் கடந்த ஞானம் எதற்கு?

கண்கெட்ட பிறகு ஏன் சூரிய நமஸ்காரம்?

இத்தனை கேள்விகளும் நாம் எங்கெங்கோ கேட்டவைகள்தாம்! இத்தனைக்கு நடுவிலே மானுட மாண்புகள் வேறு.... சமீபத்தில் பொங்கலைக் கொண்டாடினோம்... விவசாயிகளைக் கொண்டாடினோமா... நாலு நெல்லு பெயர் தெரியுமா? உழ, விதைக்க, நாத்து நட, களையெடுக்கத் தெரியுமா? என்றைக்காவது சாப்பிடும்போது விவசாயின் முகம் ... (ஏன் அப்பாவாகக்கூட இருக்கலாம்...) தெரிகிறதா?

**வரப்புயர நீர் உயரும்**
**நீர் உயர நெல் உயரும்**
**நெல் உயர குடி உயரும்**
**குடி உயரக் கோல் உயரும்**
**கோல் உயரக் கோன் உயர்வான்**

இப்பாடலுக்குள் நம் வாழ்க்கையின் மாண்புகளைப் பார்க்கப் பழகுவோர் யார் யாராலே உயர்கிறார்கள்? இன்று அடிப்படைகளை மறந்தவர்களாய்... மாண்புகளை அறியாதவர்களாய் யார் வேர், யார் பயன் தருகிறார்கள், யார் பயன் பெறுகிறார்கள், யார் உயர்த்த யார் உயர்கிறார்கள் என்று அறியாமலேயே வாழ்கிறோம்!

"முடியாட்சி காலத்தில் எழுதப்பட்ட ஔவையின் இப்பாடல் குடியாட்சிக்கான வேரல்லவா?"

*தொடர்வேன்!*



சுட்டிக்காட்டிகள்

✍ மேபல்

# சின்ன அண்ணன்

கும்மிருட்டு நேரத்தில் மலைப்பகுதியில் உள்ள அழகான வெளிச்சம் மின்மினிப் பூச்சி மாதிரி அங்கொன்றும் இங்கொன்றுமாக அழகாக ஜொலித்துக் கொண்டு மலைமேல் இருக்கும் பட்டணம் மறைந்திருக்க முடியாது என்பதுபோலத் தோற்றமளிக்கும்.

குளிருக்கு இதமாக காய்ந்துபோன தேயிலை குச்சிகளைப் பொறுக்கி போட்டு தீ வைத்து குளிர் காய்ந்து கொண்டிருக்கும் எங்கள் கண்களில் தூரத்தில் வெளிச்சம் கம்பளிப் பூச்சி நகர்வதுபோலத் தெரியும். அது பெட்ரோமாக்ஸ் விளக்குகளின் வெளிச்சம் என்பதை எங்களால் யூகிக்க முடியும். அதுகிட்ட நெருங்கி வர வர டம்..டம் என்று கொட்டடிக்கும் சத்தமும் கேட்க ஆரம்பிக்கும். அந்தச் சத்தம் கேட்டவுடன் சிட்டாகப் பறப்போம் நானும் என் சின்ன அண்ணனும் பக்கத்து வீட்டு நண்பர்களுடன்.

எங்கள் வீடு உயரமான பகுதியில் இருப்பதால் அந்த அழகிய மலைப்பாதையில் வேகமாக கீழே இறங்கி ஓடுவோம் கூத்து பார்க்க. மலை அடிவாரத்தில் உள்ள அந்த சின்ன ஊரில் உள்ள தெருவில் பெட்ரோமாக்ஸ் விளக்கு வெளிச்சத்தில் கொட்டடித்துக் கொண்டு கூத்தாடிக்கொண்டு வருவார்கள். சுற்றி சுற்றி நின்று வேடிக்கை பார்ப்பது சந்தோஷமாக இருக்கும்.

அந்த வாரம் முழுவதும் நாங்களும் ரதி மன்மதன் போல பலா இலைகளைக் கோர்த்து உடுத்தி வேஷம் போட்டு ஆடி விளையாடுவோம். சுற்றி நிற்கும் பலா மரத்திலிருந்து விழும் இலைகளைப் பொறுக்கி ஈக்குச்சி கொண்டு இணைத்து கிரீடம், இடுப்புக்கு ஒட்டியானம், கைகளுக்கு வளையல் என்று கோர்த்து இரண்டு பேருக்கு வேஷம் போட்டு, கர்சிப்பை கையில்

கொடுத்து, தகர டப்பாவில் கொட்டடிக்க ஆடி விளையாடுவது செம ஜாலியாக இருக்கும். திடீரென அம்மா "பசங்களிடம் விளையாடக்கூடாது", "ராத்திரி இனிமேல் வெளியே போகக்கூடாது" என்று பிடித்து வைத்து கட்டுப்பாடு போட கவலையாக இருந்தது எனக்கு.

எனக்கும் சின்ன அண்ணனுக்கும் இரண்டு வயது வித்தியாசம். சின்ன வயதில் இருந்து எங்கும் எப்போதும் எந்த இடத்திலும் நானும் என் அண்ணனும் பிரியாமல் இருப்போம். வானத்து நட்சத்திரங்கள் அழகாக ஜொலிக்கும்போது கல்லில் உட்கார்ந்து நட்சத்திரக் குடும்பத்தை அழகாக விளக்கிச் சொல்லும்போது அண்ணனின் அறிவு என்னை வியக்க வைக்கும். அப்பா காசு கொடுத்தால் இரண்டு பேரும் ஓடிப்போய் ஒருவருக்கொருவர் ஷேர் பண்ணி சாக்லேட் வாங்கி சாப்பிட்டு கதை பேசிக்கொண்டு தெருவில் நடந்து வர பிடிக்கும்.

ஆனால் இப்படி ஒன்றாக சுற்றிய என் அண்ணன்கூட என்னை அனுப்பாமல் பிடித்து வைத்தது எரிச்சலாக இருந்தது. அடுத்த நாள் விளையாட விடவில்லை. எல்லாரும் விளையாடும்போது நானும் படியில் உட்கார்ந்து வேடிக்கை பார்த்தேன். கொஞ்சம் கடுப்பாக இருந்தது இல்லைஞ் இல்லை நிறையவே கடுப்பாக இருந்தது

மற்றவர்கள் விளையாடுவதை சோகமாக பார்த்துக்கொண்டு இருந்த என்னிடம் சின்ன அண்ணன் வந்து இடுக்கணில் உதவவே சகோதரன் பிறந்திருக்கிறான் என்ற வேதாகம வசனத்தைப்போல, "நான் இருக்கேன் நம்ம விளையாடுவோமா?" என்றார். உர்ஞ்என்று முகத்தை வைத்துக் கொண்டிருந்த என்னிடம் "என்கிட்ட என்ன இருக்கு சொல்லு பார்ப்போம்?" என்று கைகளை பின்னால் மறைத்து வைத்து நிற்க, "எனக்கே கோபமா இருக்கு இதுல வேற நீங்க" என்று சொல்ல, மறைத்து வைத்திருந்த கைகளை முன்னால்

## சிந்திக்க சில வரிகள்

**உன்னைக் கஷ்டப்படுத்தும் சிலர், உன்னை உடைப்பதாக நினைத்து சந்தோஷப்படலாம்; ஆனால் அவர்களுக்குத் தெரியாது, கடவுள் உன்னை உருவாக்கிக் கொண்டிருக்கிறார் என்று!**

**- deeRaj**





நீட்டி என் முன்னால் ஈக்குச்சிகளைக் கொட்டினார். “அதான் அம்மா விளையாடக் கூடாதுன்னு சொல்லிட்டாங்களே” என்று நான் புலம்ப, “இது வேற விளையாட்டு” என்றார். “ஓ நீங்க விளையாட நான் கோத்து தரணுமா?” எதையும் புரிந்து கொள்ளும் மன நிலைமையில் நான் இல்லாததினாலும் முழுமையாகக் கேட்கும் பொறுமை என்னிடம் இல்லாததினாலும் கோபம் மண்டையில் ஏறியது.

“அதுதான் இல்ல இது வேற விளையாட்டு, இந்த நீண்ட குச்சியில் இலையை கோர்த்து எத்தனை குச்சி கொண்டு வாரோமோ ஒவ்வொன்றுக்கும் பத்து பைசா (அப்போ அதில் பத்து ஆரஞ்சு மிட்டாய் வாங்கலாம்) அப்பா தருவாராம், வா இலை பொறுக்குவோம்“ என்று கையைப் பிடித்து இழுக்க, என் கவலை எல்லாம் பறந்தது.

அவரோடு சேர்ந்து ஈக்குச்சியில் இலைகளைப் பொறுக்கி சொருகி கோர்த்து, அப்பாவிடம் கொடுத்தபோது அப்பா அவைகளை ஆட்டுக்கு உணவாகக் கொடுத்தார். அந்த ஆடுகள் அதை உண்பதைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தோம். எத்தனைக் குச்சிகள் கொண்டு வந்திருந்தோமோ அத்தனை குச்சிகளுக்கும் அப்பா கணக்கு போட்டு காசு கொடுக்க சிட்டாய்ப் பிறந்தோம் சாக்லேட் கடைக்கு.

வாசலில் உட்கார்ந்து சுளகில் அரிசியைக் கொட்டி கற்களை பொறுக்கி தூக்கி வீசிக் கொண்டிருந்த அம்மா முன்னால் உட்கார்ந்து நாங்கள் சாப்பிடும்போது “இப்படியே இருந்தா சரிதான்” என்று சுளகை புடைத்துக்கொண்டே சொன்னார். அது எவ்வளவு உண்மையானது! சின்ன வயதில் நாம எப்படி இருந்தோம் என்று யோசித்துப் பார்த்தா பெரிய வயசுல ரொம்ப அன்பா இருப்போம்.

கண் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராதவன் காணாத தேவனிடத்தில் அன்புகூர முடியுமா என்று வேத வசனம் சொல்வது எவ்வளவு உண்மையானது! கடவுளை ரொம்ப நேசிக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு கூடப்பிறந்த சகோதரரை நேசிக்காமல் இருப்பது எவ்வளவு வருத்தமானது! சின்னச் சின்ன விஷயங்களை விட்டுக் கொடுப்பது, ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வது, ஒற்றுமையில் விரிசல் வராமல் பார்த்துக் கொள்வதின் முக்கியத்துவத்தையும், சகோதரர்கள் ஒருமித்து வாசம் பண்ணுவது எவ்வளவு இன்பமானது என்பதையும், சின்ன விஷயமோ பெரிய விஷயமோ பிரச்சனைகளில் எப்போதும் நான் சந்தோஷமாக இருக்க முன்னால் வந்து “நான் இருக்கிறேன் உனக்கு என நிற்கும்“ பொறுப்பையும், சகோதர சிநேகத்தை விட்டு விடாதீர்கள் என்று வேதாகம வசனத்தின்படி சகோதரத்துவத்தின் முக்கியத்துவத்தையும் எனக்குச் சுட்டிக்காட்டியது என் சின்ன அண்ணன்.



# காணவில்லை

பிடித்து விளையாண்ட தட்டான்களைக் காணவில்லை
பரந்து திரிந்த வண்ணத்துப்பூச்சிகளைக் காணவில்லை
தேங்கிய குட்டைகளில் நீந்திக் கொண்டிருக்கும் அரத்தவளைகளைக் காணவில்லை
தாவித் திரிந்த தவளைகளைக் காணவில்லை
வீடெங்கும் கூடுகட்டி பாடிக் கொண்டிருந்த சிட்டுக் குருவிகளைக் காணவில்லை
பசுமையைப் பறைசாற்றிக் கொண்டிருந்த பச்சைக்கிளிகளைக் காணவில்லை
வேலிகளில் ஓடிக்கொண்டிருந்த ஓணானைக் காணவில்லை
பாடித்திரிந்து கொண்டிருந்த பலவித பட்சிகளைக் காணவில்லை
தோண்டும் இடமெல்லாம் நெளிந்து கொண்டிருந்த புழுக்களைக் காணவில்லை
வீடெங்கும் பூத்துக்கொண்டிருந்த செடிகளைக் காணவில்லை
பூக்களைத் தேடி நாடி வந்த தேனீக்களைக் காணவில்லை
ரீங்காரமிடும் வண்டுகளின் சத்தம் கேட்கவில்லை
இவை நம் வள வாழ்வுக்குச் செய்த பங்கினைக் காணத்தவறிய மனிதனே!
இவையனைத்துக்கும் வாழ்வாதாரமான இயற்கையை அழித்துவிட்டாயே!
ஆறாவது அறிவு சுயநலம்தானோ?

– சிரில்



✍ ஜெஸ்வின்

## கல்யாணமாம் கல்யாணம்

# குழந்தை வளர்ப்பு

இப்போதெல்லாம் குழந்தைகள் தானாக வளர்க்கிறார்கள் (growing), வளர்க்கப்படுவது இல்லை (not raised up) என்று முன்னமே ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறேன். தானாக வளர்வதற்கும் வளர்க்கப்படுவதற்கும் உள்ள வித்தியாசம்கூட இப்போதைய இளம் பெற்றோர்களுக்குப் புரியுமா எனத் தெரியவில்லை.

அந்தந்த நேரத்தில் ஏதோ ஒரு உணவைக் கொடுத்துவிட்டால் போதும். பிள்ளைகள் தானாக வளரும். இதுவல்ல பிள்ளை வளர்ப்பு. 50 வருடங்களுக்கு முன் ஒரு குழந்தை தனது 10 வயது வரை சாப்பிட்ட சார்க்கரை அளவை இக்காலக் குழந்தைகள் 1 வருடத்தில் சாப்பிடுகிறது என்கிற ஒரு புள்ளி விபரத்தை வாசித்து அதிர்ச்சியடைந்தேன். கட்டுக்கடங்காத இனிப்பு வகைகளைக் குழந்தைகளுக்குக் கொடுத்து வளர்க்கிறோம். எல்லாவற்றிலும் இனிப்பைக் கலந்தே கொடுக்கிறோம்.

செயற்கைத்தனமாக ருசி மிகைப் படுத்தப்பட்ட உணவுகள் சிறு குழந்தை களைக் குறிவைத்து விளம்பரம்

செய்யப்பட்டு விற்கப்படுகின்றன. பாக்கெட் உணவுகளை ருசி கண்டுவிட்ட குழந்தைகள் சரியான ருசியில் இருக்கும் சத்தான வீட்டு உணவுகளைக் கண்டு முகம் சுழிக்கிறது.

எந்த உணவைக் கொடுக்கிறோம். அதை எப்போது கொடுக்கிறோம்? எதற்காகக் கொடுக்கிறோம்? என்பதை எல்லாம் திட்டமிட்டுக் கொடுப்பதே பிள்ளை வளர்ப்பு. சாப்பாட்டில் மட்டுமல்ல எல்லாவற்றிலும் இந்தத் திட்டமிடல் வேண்டும்.

**செவுக்குண வில்லாத போழ்து சிறிது வயிற்றுக்கும் ஈயப் படும்.**

எனும் திருக்குறளை திருவள்ளுவர் தீர்க்கதரிசனமாகத்தான் சொல்லியிருப்பார் போலும். இக்காலக் குழந்தைகளுக்கு செல்ஃபோன் கையில் இருந்தால் சாப்பாடு, தண்ணி வேண்டாம். பெரும்பாலான வீடுகளில் செவிக்கும், கண்ணுக்கும், வயிற்றுக்கும் ஒரே நேரத்தில் உணவு போகிறது. இது மிக ஆபத்தான பழக்கம் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. எதைச் சாப்பிடுகிறோம்? எவ்வளவு சாப்பிடுகிறோம்? ஏன் சாப்பிடுகிறோம்? என எந்த உணர்வும் இல்லாமல் உள்ளே தள்ளுவது உடல் பருமனுக்கும் உடல் பருமன் அடிப்படையிலான பலவித நோய்களுக்கும் காரணம்.

வருந்தத்தக்க விதத்தில் இக்காலத்தில் குழந்தைகள் இவ்விதமே பழக்கப்படுத்தப் படுகிறார்கள். சில நாட்களுக்கு முன் ஒரு ஆலய அசன விருந்தில் சாப்பிட அமர்ந்திருந்தேன். எதிரில் ஒரு பெண் குழந்தைக்கு இலையில் சாப்பாடு. இலைக்கு அருகில் செல்ஃபோனும் சாய்த்து வைக்கப்பட்டிருந்தது. கேட்டால்,



“செல் இல்லாம சாப்பிட மாட்டா சார்” என்று பதில் வரும் என்று எனக்குத் தெரியும்.

சாப்பாடு நேரத்தில் மட்டுமல்ல எல்லா நேரத்திலும் இப்போது குழந்தைகள் கையில் செல்ஃபோன்தான். குழந்தைகள் தொந்தரவு செய்யாமல் இருப்பார்கள் என்பதற்காகப் பல பெற்றோர்கள் செய்யும் செயல் இது. பார்வைத் திறன் வளர்ச்சியில் பாதிப்பு, உளவியல் ரீதியான பாதிப்புகளுக்கு அப்பாற்பட்டு பெற்றோருக்கும் குழந்தைக்குமான உறவு வளர்ச்சியே பாதிக்கப்படுகிறது. பின்னாட்களில் பெற்றோருக்குப் பிள்ளை கீழ்ப்படியாது. ஏனோதானோ என்று வளர்க்கப்பட்ட பிள்ளை பெற்றோரை ஒரு பொருட்டாகவே நினைக்காது. அளவோடு கொடுத்து வளமாக வளர்த்திடுங்கள்.



# டீன் ஏஜ் டிஜேஸ்

ஹாரிஸ் ப்ரேம்

எங்கள் வீட்டில் இரண்டு டிஜேக்கள் இருக்கின்றார்கள். டிஜேக்கள் என்றால் டிஸ்கோதைகளில் குத்துப் பாட்டுகள் போடுவதற்காகவே அமர்த்தப்படும் டிஸ்க் ஜாக்கிகள். குத்து குத்து என்று குமுறுவதற்குப் பழைய காலம் தொட்டு டிஜிட்டல் காலம் வரை ஒரு தனித்திறமை தேவைப்பட்டிருக்கிறது.

நேரம் காலம் அறிந்து விருந்தாளிகளின் மூடுக்கு ஏற்ப பாடல்களை செலக்ட் செய்து எஃபக்ட்டுகளுடன் முடுக்குவதற்கு டிஜேக்கள் தனித்திறமை பெற்றவர்கள்.

முன்பெல்லாம் மெட்ரோபாலிட்டன் சிட்டிகளில் குறுகிய அறைகளுக்குள் முடுக்கிக் கொண்டிருந்தவர்கள் இப்போது ஆதிவாசி கிராமங்களில் இருந்து கிறிஸ்தவ கல்யாணம் வரைக்கும் முடுக்கித் தள்ளுகிறார்கள்.

எங்கள் வீட்டு டிஜேக்களில் மூத்தவருக்கு வயது 17. இளைய டிஜேக்கு 14. பள்ளி முடிந்து வந்ததும் இரண்டாவது மாடிக்குச் சென்று ஒபன் ஏரில் ஒருவன் முடுக்குவான்.

மொத்தம் பத்துப் பாடல்கள்தான் அவன் கைவசம். அனைத்துமே ஃபாதர் பெர்க்மான்ஸ்சினுடையது. அதிலும் அவர் கண்ணீரோடும் ஏக்கத்தோடும், பெருமூச் சோடும் லோ ஸ்கேலில் கதறிப் பாடும் பிழிந்து எடுத்த சோகப் பாடல்கள்! டிஜே ஆரம்பித்ததும் முன் வீடு, பக்கத்து வீடு, பின் தெரு எல்லாமே ஒரு விதமான சோகம் நதியாய்ப் பொங்கி, போபால் விஷவாயு போல பரவுவதை உணரலாம்!

காப்பி குடித்த கையோடு இளையவன் கீழே ஆரம்பிப்பான் அவனது குத்தை! அவனிடமும் பத்துக்கும் குறைவான பாடல்கள். ஆனால் லோ ஸ்கேல் கிடையாது. எல்லாமே உச்ச ஸ்தாயியில் ஃபிரெடி ஜோசப் பாடும் கண்ணீர் பாடல்கள்! அதிலும் பிழிந்து எடுத்த சோகம் ஆர்ட்டீஷியன் ஊற்றுப்போல இரண்டாவது மாடி வரைக்கும் போய் வானத்தில் சிதறி பக்கத்தில் இருக்கிறவர்களை நனைப்பதை உணர முடியும்!

இந்த டிஜேக்களின் முதலீடு என்பது மிகவும் சொற்பம்தான். ஆளுக்கு ஒரு

பென்டிரைவ், எப்போதோ வாங்கிய கம்ப்யூட்டர் ஸ்பீக்கர்களின் கழற்றி எடுக்கப்பட்ட டிரைவர்கள், சப் ஊஃபர்களில் இருந்து கழற்றப்பட்ட போர்டுகள், டிரான்ஸ்பார்மர் ஒரு சால்டிரிங் அயர்ன், சதா யூடியூப் டி.ஐ.ஒய் பார்த்து அவர் களாகவே வடிவமைத்த கஷ்டம் மேடு ஆம்ப்ளிஃபையர்கள் மற்றும் ஸ்பீக்கர்கள் என சிறிய உலகம்தான். ஆனால் ஆர்வங்களும் தளராத முயற்சிகளும் நிறைந்த இன்ட்ரஸ்டிங்கான ஏரியா அது.


இந்த டிஜேக்களைப் பொறுத்தவரை பாடல்கள் அவர்களுக்கு ஒரு பொருட்டு அல்ல. இந்தப் பத்துப் பாடல்களும் ஒரு நாளைக்குப் பத்து நேரம் வீதம் வருடத்திற்கு ஆயிரம் முறை போடப்பட்டதுதான். ஆனால் ஒவ்வொரு நாளும் போடப்படும் ஃப்ரீகுவன்சி என்பது மிகவும் முக்கியமானது.

சும்மா எல்லாம் பாடல்கள் உடனே போட்டுவிட மாட்டார்கள். ஒரு கனத்த காத்திருப்பு கவுண்டவுனுக்கு பிறகு கிளம்பும் விண்வெளி ராக்கெட் போல அதற்காகக் காத்துக் கிடக்க வேண்டும்!

பல ஃப்ரீக்வன்சிகள் செட் பண்ணப்பட்டு பல பொசிஷன்களில் ஸ்பீக்கர்கள் வைக்கப் பட்டு காற்றின் அளவு, ஒலி மாசு, காற்றின் ஈரப்பதம் இவைகள் எல்லாம் கண்காணித்த பிறகு, எவ்வளவு வால்யூம், எவ்வளவு ஃப்ரீகுவன்சீயில் வேண்டும் என்கின்ற கணக்கீடுகளுக்குப் பிறகுதான் நேரலை ஆரம்பமாகும்.

நமக்கோ என்ன ஃப்ரீக்குவன்சியில் கேட்டால் என்ன, கேட்டதுதானே கேட்கப் போகிறோம் என்கின்ற வெறுப்பு மேலிட ஆரம்பிக்கும்.

எப்போதும் குறையாமல் பொங்கும் இந்த சோகத்தை கேட்டு கிட்டத்தட்ட மன நோயாளி நிலைமைக்கு மாறிவிட்ட நான் மாடிக்குச் சென்றாவது கொஞ்சம் காற்று வாங்கலாம் என்று போனால் அங்கே கண்ணீர் பொங்க அழுது பாடிக்கொண்டிருந்தார் ஃபாதர்! அவர் நேரிலேயே அழுவதுபோல, அழுகின்ற அவரை எந்த விதத்திலும் தொந்தரவு செய்யாத நல்ல பிள்ளையாய் லேசாக அதிர்ந்த ஸ்பீக்கர்களையே சோகமாகப் பார்த்துக் கொண்டிருந்தான் மூத்த டிஜே!



கீழ என்னடான்னா ஒருவன் ஆரஞ்சுப் பழத்தைப் பிழிவதுபோல சோகத்தைப் பிழிகிறான். மேலே வந்து காற்று வாங்கலாம் என்றாலும் இங்கே இன்னொருவன் கண்ணீரை மழையாகவே கொட்டுகிறானே என்று நொந்து போனவனாக நான் உட்கார்ந்தேன்.

“டியூட்டரில் இன்னும் கொஞ்சம் ஹைமிட் கிடைத்தால் பாடல்கள் வேறு லெவலில் கேட்கலாம்” என்று அவன் சொன்னபோது உண்மையாகவே நான் அழ ஆரம்பித்து விட்டிருந்தேன்.



# சிந்தனை பின்னியச் சிலந்திவலை!

பிஷப். ஜோசப் மோகன் குமார்




மரியாள்
யோசேப்பின்
மங்கலத்திருமணம்
முடிந்தது!

வேர்வையும் தித்திக்கும்
வெட்க வேளை!
பாதங்களே சிறகுகளாகும்
பரவசம்!

பௌர்ணமியாகும் முன்பே
நிலவு,
நீர்குமிழியாய் உடைந்தது!

மரியாள்,
தானாகவே
தாயானது கண்டு,
தணலானார் யோசேப்பு!

தாய்பாலே
கள்ளிப்பாலானதே?
இதயம் உரலானது;
எண்ணம் உலக்கையானது!

யோசேப்பு தன்,
அத்தனை ஆசைக் கனவுகளையும்
அவசரமாகச் சிரச்சேதம் செய்தார்!

மல்லிகையைத் துண்டிக்க
மனசு,
கத்திரிக்கோலைக்
கையிலெடுத்தது!

உளைச்சலின்
உள் இரைச்சலில்
உறங்கிப் போனார்,
யோசேப்பு!

கண்களுக்குள்
பூவாணமாய்
கனவில் வந்தான்
காபிரியல் தூதன்!

சந்தேகத்தின் தலையில்
சம்மட்டி அடி விழுந்தது;

“யோசேப்பே!
சிந்தனைச் சகதியை
வழித்தெறி!
மரியாள்
நெருப்பை விடச்
சுத்தமானவள்!
ஆவியின் தூய்மையே
அவளது கரு!
உதிக்கும் சூரியனுக்கு
‘இயேசு’ எனப் பெயரிடு!
அவர்,
பூமியின் அழுக்குகளைப்
புரட்டித் தள்ளும்
புனித ஒளி நதி!

உறக்கம் கலைந்தவரின்
உடம்பில் நீர்விதைகள்!

திறக்கப்பட்ட கதவுக்குள்
தென்றல் நுழைந்ததும்
புழுங்கிய இதயம்
பூத்தது!

“கன்னி கர்ப்பமாகி
மகனை ஈனுவாள்;
அவருக்கு,
‘‘இம்மானுவேல்’
எனப் பெயர் சூட்டுவர்!’

விதைக்கப்பட்ட இறைவாக்கு
முளைத்தது!

யோசேப்பின்
இரவு தூங்கியது;
பகல் விழித்தது!



# முழுமைக் கிறிஸ்தவம் 21

✍ மைக் யெல்

இந்தியா என் தாய்நாடு என்று பள்ளிகளில் உறுதிமொழிகள் எடுத் திருக்கிறோம். ஆனால் அவ்வப்போது மொழி, மதம், இனம் போன்ற பிரிவினை எண்ணங்கள் நமக்குள் தலைதூக்கவே செய்கின்றன. மீம்கள், சமூகவலைத்தளப் பதிவுகள், உரையாடல் களில் பிற மாநிலத்தவர்கள் பற்றியும் பிற மதத்தவர்கள் பற்றியும் நகைச்சுவை யாகவும் கோபமாகவும் நம் கருத்துகளை வெளியிடுகிறோம். நம் மதத்தின் பிரிவுகளுக்குள்ளும் கட்சிகளுக்குள்ளும் உரசல்களும் வாதங்களும் பெருக்கெடுக் கின்றன.

நேற்று இரவு பத்துமணிக்கு ஒருவழிப்பதை தடைகள் இல்லாத நேரம் காரில் வந்து கொண்டிருந்தோம். நிச்சயமாக நம் மாநிலத்தான் அல்ல என்று வெளிப்படையாகத் தெரிந்த ஒரு இளைஞன் தோளுக்கும் காதுக்கும் நடுவே கைபேசியைக் கவ்விக்கொண்டு பைக்கில் எங்களுக்கு முன் வந்து சட்டென நின்றான். எங்களைத் திட்டினான். கைகலப்பு ஏற்படும் வாய்ப்பைத் தவிர்த்து தொடர்ந்தபோது எங்களுக்குள் நடந்த உரையாடலும் அதைச்சார்ந்து என் நினைவோட்டத்தில் கலந்த கருத்துகளையும் சுருக்கமாக உங்களுக்குத் தருகிறேன்.

நாம் விரும்பியோ விரும்பாமலோ நம் நாட்டைப் பலர் ஆட்சி செய்திருக்கிறார்கள். அதன் பலன்களையும் விளைவுகளையும் நாம் இன்றும் அனுபவிக்கிறோம்.

நம் நாட்டில் நாம் பிறந்தது நாம் தேர்ந்தெடுத்தது அல்ல. கடவுள் நம்மை இந்த நாட்டில் வைத்திருப்பதும், நமக்கு என்று இந்த நாட்டை வைத்திருப்பதும் தற்செயல் அல்ல. நம் நாடு பல்வேறு மக்களைக் கொண்டது. வேற்றுமையில் ஒற்றுமையே நம் சிறப்பு.

நாம் பிற மாநிலங்களுக்கும் நாடுகளுக்கும் சென்று குடியேறியதுபோல வந்தாரை வாழவைப்பதாகச் சொல்லிக் கொள்ளும் நம் மாநிலத்துக்கும் பலர் வருவார்கள், வர வேண்டும். நாம் விரும்பாத தீமைகள் உடன் வரும்போது தீமையைத்தான் நாம் தாக்க வேண்டும். நபர்களை அல்ல. உன்னைப் போல் பிறனை நேசி, எதிரியை நேசித்து நன்மை செய் என்ற இயேசு, அரசாங்கத்தைப் பகைக்கச் சொல்லவில்லை.

நம் மாநிலத்தின் நற்குணங்களையும் புகழையும் நம்முடன் வந்து வாழும் பிற மாநிலத்தவர்களுக்குப் பகிர்ந்து கொள்ளலாமே! என்றார் ஒரு நண்பர். வடக்கே அருட்பணி செய்கிறவர்களுக்குத் துன்புறுத்தல்கள் ஏற்படுகிறதே. ஆனால் இங்கே நம் ஊருக்கு வரும் வடமாநிலத்தவர்களுக்கு அருட்பணி செய்ய அருமையான வாய்ப்பு வந்திருக்கிறதே என்றார் இன்னொரு நண்பர்.

நாம் இத்தனை வளங்களும் திறமையும் உள்ள சிறந்த கூட்டம் என்றால் திரைகடல் ஓடியது போல நம் நாட்டின் பல பகுதிகளுக்கும் போய்




சாதிக்கலாமே! சக மனிதர் மேல் அன்பு காட்டவும், பிரிவினைகளைத் தாண்டி சாதிக்கவுமே கடவுள் நம்மை அழைத்திருக்கிறார். நமக்கு இருக்கும் அரசியல் உரிமைகளைக் கேட்டுப் பெறுவதிலும் அன்பே ஆயுதமாகவும் கருவியாகவும் இருக்க வேண்டும். அன்பு என்னும் ஆவியின் கனியும் வரமும் நம்முடன், நமக்குள் வசிக்கும் கடவுளின் ஆவியானவரால் மட்டுமே சாத்தியம் என்பதை உணரும்போது நாம் இயேசுவின் சீடர்களாக மாறுகிறோம். கிறிஸ்தவம் முழுமையடைகிறது. பவுல் சொன்னதுபோல கிறிஸ்துவின் அன்பு நம்மை நெருக்கி ஏவும்போது நம்மால் நம் சக மனிதரை வெறுக்க முடியாது.

## சிந்திக்க சில வரிகள்

**தங்களுடைய உண்மையான அடையாளம் (identity) அறிந்தவர்கள், தாங்கள் முக்கியமான தலைவர்களாக வேண்டும் என்று போராட மாட்டார்கள்!**

**- deeRaj**





# ஹலோ மிஸ்டர் மெல்வின்

விழியன்

மூன்றாவது நாளாகப் பள்ளிக்குச் சைக்கிளை எடுத்துச் செல்கின்றான் மெல்வின். அவன் வகுப்பு நண்பர்கள் முன்னிலையில் சைக்கிள் ஓட்டும்போது காற்றில் பறப்பதுபோல அவனுக்கு இருந்தது. அன்றைய தினம், குடியரசு தின விழாவிற்காகச் சில பயிற்சிகள் இருந்ததால் பள்ளி நேரம் தாண்டியும் பள்ளியில் இருக்கவேண்டி இருந்தது. கொஞ்சம் இருட்டிவிட்டது. சைக்கிளில் விளக்கும் இல்லை. விளக்கு உள்ள சைக்கிள் இப்போதெல்லாம் வருவதில்லை. மெல்வின் வீட்டிற்கு இரண்டு தெரு தள்ளி அந்தச் சம்பவம் நடந்தது. ஏதோ பைப் என்று நினைத்து சைக்கிளை ஏற்றினான். மெல்வினுக்கு ஏற்றிய பின்னரே தெரிந்தது, அது ஒரு நாயின் வால் என்று. வெடுக்கென நாய் வாலினைச் சிலுப்ப, விநாடியில் சைக்கிள் நிலைகுலைந்தது. கோணல்மாணலாக முன் சக்கரம் திரும்ப, ஹாண்டில்பார் தரையை முத்தமிட்டது. மெல்வினின் கால் முட்டியும் உள்ளங்கையும்கூட தரையை முத்தமிட்டன. விழுந்த பதற்றத்தைவிட மெல்வினுக்குப் பயம் அந்த நாய்தான்.

எங்கே அந்த நாய் என்று சுற்றுமுற்றும் பார்க்க அவன் முதுகிற்குப் பின்னால் உஸ் உஸ் என்று சத்தம். மெல்ல மெல்ல தலையைத் திருப்பினான். பயந்துகொண்டே தன் பின்னால் இருக்கும் நாய் எப்படி இருக்கும், என்ன செய்யும் – கடிக்குமா, குரைக்குமா, குதறுமா என நினைத்துக்கொண்டே திரும்பினான். தூரத்து தெருவிளக்கின் வெளிச்சத்தில் அதன் கண்கள் மட்டும் பளிச்சென்று இருந்தன. அதுவும் அவ்வளவு கிட்டத்தில் ஒரு நாயினை எதிர்கொண்டதே இல்லை. அது முறைக்கவில்லை. அது குரைக்கவுமில்லை. அப்படியே மெல்வினைப் பார்த்துக்கொண்டே

இருந்தது. மெல்வினும் நகரவே இல்லையே. அப்படியே அமர்ந்திருந்தான். நல்லவேளை அந்தச் சாலையில் ஸ்கூட்டர், பைக், கார் என அவ்வளவாக வராது. அட வந்திருந்தால் நாய் நகர்ந்திருக்கும், மெல்வின் எழுந்திருப்பான். நான்கு நிமிடங்கள்தான் அப்படி அமர்ந்திருப்பான். ஆனால் அவனுக்கு ஓர் இறுதி ஆண்டுத் தேர்வு எழுதிய உணர்வு இருந்தது.

இருசக்கர வாகனத்தில் மளிகைச் சாமான்களைப் போடும் கண்ணன் கடை வேலையாள் அங்கே நல்லவேளையாக வந்தார். வண்டியின் விளக்கு வெளிச்சம் நாயின் கண்களிலும் மெல்வினின் கண்களிலும் தெறித்தது. “என்னாச்சு கண்ணா விழுந்துட்டியா?” என வண்டியை நிறுத்தினார். வண்டியினை உயிர்ப்புடன் வைத்திருந்து ஸ்டாண்ட் போட்டு இறங்கினார். நாய் நகரவில்லை. இப்பவும் குரைக்கவில்லை. “வீட்ல போய் அம்மாகிட்ட மருந்து போட்டுக்க. கொஞ்சம் உரசி இருக்கு”. கீழே விழுந்த பையையும் தண்ணீர் பாட்டிலையும் எடுத்து சைக்கிளில் மாட்டினார். “ச்சூ போ...” என நாயை விரட்டினார். மெல்வின் சைக்கிளை மிதிக்காமல் தள்ளிக்கொண்டே வீட்டிற்குச் சென்றான்.

கைகளைக் கழுவிக்கொண்டு அம்மாவிடம் காட்டினான். முதலுதவி செய்தார். சாய்வு நாற்காலியில் இருந்த தாத்தா “மெல்வின் இன்னைக்கு என்ன லேட்டு?” எனச் சத்தமாகக் கேட்டார். ஏற்கனவே கடுப்பில் இருந்தான் மெல்வின், விடுவிடுவென தாத்தாவின் அருகே சென்றான். ஆனால் எதுவும் பேசவில்லை. அவரின் கண்கள் அந்த நாயின் கண்களைப் போலவே மின்னின. திரும்பத் திரும்ப பார்த்தான். காலையில்கூட தாத்தாவின் கண்கள் இப்படி இல்லையே. திடீரென இப்படி மாறிவிட்டதே.

“தாத்தா, இன்னைக்கு கண் ஆப்பரேசன் ஏதாச்சும் செய்துகிட்டீங்களா?”

“என் கண்ணுக்கு ஒரு குறையும் இல்லை. வாரத்துக்கு நாலு நாள் கீரை சாப்பிட்றேன். எழுபது வயசாகுது, கண்ணாடி போடல, எனக்கு ஏண்டா ஆப்பரேசன் எல்லாம்?” என வெகுண்டு எழுந்தார். திரும்பவும் அவர் கண்களை உற்றுப்பார்த்தான். அதே மினுக்கும் கண்கள்.

கையில் அடிபட்டதால் விளையாட அனுமதிக்கவில்லை. நன்றாக இருட்டியும் இருந்தது. இன்றைக்கு வேண்டாம் என அம்மா சொல்லிவிட்டார்கள். எப்படியாகிலும் நண்பர்களிடம் நாய் வாலில் சைக்கிள் ஏற்றிய சம்பவத்தைச் சொல்லவேண்டும் எனத் துடித்தான். “மெல்வின், நீ வந்தா, செடிக்கு தண்ணீர்விட சொல்லலாம்னு இருந்தேன். காலையில விட்றயா, இப்பவே விட்டுட்றியா? அப்புறம் செடி வாடிப்போச்சு சோர்ந்துபோச்சுன்னு என்னை வம்பிழுக்கக் கூடாது” என்றார் அம்மா. இப்போதே விட்டுவிடலாம் என்று விளக்குகளை எல்லாம் போட்டுவிட்டு பைப்பை குழாயில் சொருகினான். சுருட்டி இருந்த பைப்பினை நீட்டி அவனுக்குப் பிரியமான தோட்டப் பகுதிக்குச் சென்றான். ஆனால் சில நொடிகளில் பதறினான். அந்த பைப், நாயின் வாலினைப்போல இருந்தது. தொபகடீர்ன்னு தூக்கிப்போட்டுவிட்டு குழாய் அருகே ஓடினான். தூரத்திலிருந்து பார்த்தால் பைப் போலவே இருந்தது,

ஆனால் தொட்டபோது நாயின் வால் போலவே இருந்தது. நிலைமை சரியானதும் குழாயைத் திறந்தான். தண்ணீர் வருவதுபோலத் தெரியவில்லை. இப்பகுதியில் அடிக்கடி தண்ணீர்ப் பிரச்சனை உண்டு. நிலத்தடியில் நீர் நிறையவே கீழும் இறங்கிவிட்டது. பைப்பில் ஏதோ சத்தம் கேட்க, காதினை வைத்தான். உஸ் உஸ் உஸ் என்று சத்தம். அதேதான். அந்த நாயின் மூச்சேதான். 'மெல்வின் ஓடு' என்று சொல்லிக்கொண்டே வீட்டிற்குள் ஓடினான்.

அப்பா வந்திருந்தார். சாப்பிடத் தயாராகிக்கொண்டு இருந்தார். உள்ளிருந்து அம்மா "உங்க தங்கச்சி வந்திருந்தாங்க, உங்களுக்குப் பிடிக்கும்னு சந்தையில வாழைக்காய் ஊறுகாய் வாங்கி வந்தாங்க. டேபிள்ல இருக்கு பாருங்க". அப்பாவின் முகத்தில் பிரகாசம். அவர் கண்களைப் பார்த்தான். அப்பாடி அவர் கண்களைப்போலவே இருந்தது. அவர் கண்கள் அவருடையது போலதானே இருக்கும். ஆனால் அடுத்த நொடி மெல்வினுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. நாக்கினை நீட்டி ஊறுகாயைச் சுவைக்கும் போது நாக்கினைப் பார்த்துவிட்டான். அதே தான்... நீங்க நினைத்ததேதான். நீண்ட நாக்கு. பளபளவென மின்னியது. நாக்கில் எச்சில் வேறு தளும்பியது. அப்பாவுக்கு எப்படி இவ்வளவு பெரிய நாக்கு எனக் குழம்பினான். "அப்பா..." எனக் கத்திக்கொண்டே படுக்கைக்குச் சென்றுவிட்டான்.

கனவில் எல்லாம் அந்த நாய்தான். வகுப்பிற்குச் சென்றான். அவனைத்தவிர எல்லோரும் நாயாக இருந்தார்கள். மீண்டும் மீண்டும் வாலின்மீது சைக்கிள் ஏறி அவன் கீழே விழுந்த காட்சி. 101வது முறையாக திரும்ப கனவில் வந்தபோது அது நடந்தது. அந்த நாய் பேசியது. "மிஸ்டர் மெல்வின், எனக்கு ஒன்றும் ஆகல. ஐ எம் ஆல்ரைட். ஆனால் அடுத்தமுறை சைக்கிளைக் கவனமாக ஓட்டவும். குட் நைட்" என்று சொன்ன பிறகே தூங்கினான்.

காலையில் எழுந்தபோது, தாத்தா பால் வாங்கிவந்து காபி போட்டுக்கொண்டு சாய்வு நாற்காலியில் பேப்பர் படித்துக் கொண்டிருந்தார். பேப்பரை விலக்கி கண்களைப் பார்த்தான். அவர் கண்கள் இயல்பாக இருந்தன. தோட்டத்திற்குச் சென்று குழாயில் காதை வைத்தான். சத்தம் வரவில்லை. அவன் முகத்தில் தண்ணீர் பீய்ச்சி அடித்தது. பைப்பும் பைப் போலவே இருந்தது. அப்பா பல் துலக்கிக்கொண்டு இருந்தார். "அப்பா, நாக்கை நீட்டுங்க" என்றான். அச்சோ பையனுக்கு ஏதோ ஆகிடுச்சுன்னு நெனச்சுக்கிட்டே நாக்கினை நீட்டினார். மெல்வினுக்கு அவ்ளோ மகிழ்ச்சி. என்னடா என அம்மாவும் அப்பாவும் கேட்டாலும் பதிலில்லை.

சைக்கிளைத் துடைத்துவிட்டு, பையை மாட்டிக்கொண்டு வெடுக்கென பள்ளிக்குக் கிளம்பினான். நாயைச் சந்தித்த அதே தெருவில் செல்லும்போது நாயை தேடிக்கொண்டே சென்றன கண்கள். எங்கும் காணவில்லை. தெருவின் திருப்பத்தில் சன்னமாக ஒரு குரல் - "மெல்வின் ஐ எம் ஃபைன். நோ வொரீஸ்". திரும்பிப் பார்த்தால் அதே நாய் ஒரு காலினைத் தூக்கி மனிதர்கள் கை அசைப்பதுபோல அசைத்துக்கொண்டு இருந்தது.



## பாலைவனத்தில் பாதை தொலைத்தவனின் வார்த்தைகள்

# உறவு

✍ செ. டேவிஸ்



வானுக்கும் மண்ணுக்கும் உறவை தேடியவனே!
விண்ணகம் விட்டு மாண்டு போகும் எம்மைத் தேடியவனே!
அறிந்த மொழியில் உனை வர்ணிக்க ஆயிரம் கவிஞர்கள் உண்டு!
ஆய்வறிந்து பாடும் பண்கள் ஏராளம் உண்டு!
ஆனால் அவை எனக்கு அறியா...

ஆதியில் நீ படைத்த பண்கள் எம்மில் ரீங்காரமிடுகிறது
சேயின் சொற்கள் கேட்கும் தாய் போல!
மூவொருவன் நீ முப்பொருளாய் அமைந்த உனை
முகில் தேடும் மயிலென கடுவெளிகளில் அலைகிறேன்!

பால்வீதியில் உலாவரும் உன்னை என் மன வீதியில்
அலையவிட்டு ஆசையாசையாய் முத்தமிடுகிறேன்!
செங்குருதி சிந்திய உன் செங்கைகள் செம்மையற்ற
எனைச் சுற்றி வளைத்ததன் அதிசயம் அறிகிலேன்!

அன்றில் பறவைகளின் உறவுபோல் நம் உறவென்றாய்
பக்தியென்பதன் பொருள் அறியாமல் அலைந்த எனக்கு
ஆழ்கடலின் தீஞ்சுவைத் தண்ணீர்போல் தேடல் என்றாய்
சொற்களைத் தேடி அலைகிறேன் சொந்தங்களை விட்டு.
தேடிச் சென்றேனோ? இல்லை... இல்லை... தேடி வந்தது!
நிழல் சாயும் நேரங்கள்...
என் விழிகள் கண்ணுறங்கும் முன் நின் பாதம் சரணடைகிறேன்!
என்னைச் சமர்ப்பிக்கிறேன்!



# தணியுமா
# ஆண்பிள்ளை மோகம்?



Dr. ஜான்சி பால்ராஜ்

ஆண் குழந்தைகளுக்கு எந்த விதத்திலும் குறையாத பெண் குழந்தைகள் பெரும்பாலான குடும்பங்களில் சம அளவு விருப்பத்தைப் பெற இயலாத கீழ்த்தரமான மனநிலைக்கு முக்கியமான காரணம், நமது சமூக அமைப்பில் உள்ள சிக்கல்கள்தாம்.

பெண்ணின் திருமண வாழ்கைக்கு மாப்பிள்ளை வீட்டாருக்குக் கொடுக்க வேண்டிய வரதட்சணை, பெற்றோரை இறுதிவரை பாதுகாக்கும் பொறுப்பு ஆணிடமே உள்ளதாகக் கருதும் நிலை, பெற்றோரின் இறுதிக் கடனை ஆண்தான் நிறைவேற்றத் தகுந்தவன் என்ற அற்ப எதிர்பார்ப்பு... போன்றவை முதலிடம் வகிக்கின்றன.

இன்று குறைந்தபட்சம் இருபத்தைந்து வயதில் பெற்றோராகும் தம்பதியினர், ஆண்குழந்தை பிறந்ததும் தங்களது ஈமச்சடங்கை நிறைவேற்ற ஒரு ஆள் பிறந்துவிட்டான் என்று எண்ணி மகிழ்வது எத்தனை அறிவீனம்!?

இன்று பெண்கள் தாங்களாகவே தங்கள் பெற்றோரின் ஈமச்சடங்கை செய்யும் புரட்சிகர சிந்தனை துளிர்த்திருக்கிறது. ஒன்றிரண்டு குழந்தைகளோடு

குழந்தைப் பேற்றை நிறுத்திக் கொள்ளும் அறிவுப்பூர்வமான நிலைப்பாடு வந்துவிட்ட பின்னர் ஆண்குழந்தைகள் இல்லாத குடும்பங்களில் ஒன்றுவிட்ட சகோதரர்கள் தான் சில குடும்ப காரியங்களைச் செய்தாக வேண்டும் என்ற காலாவதியான சிந்தனைகள் உதாசீனமடைந்து வருவது வரவேற்கத்தக்கது. தான் பெற்றெடுத்த பெண் பிள்ளைக்கு இல்லாத உரிமையா தனது சகோதரன் பெற்ற ஆண்பிள்ளைக்கு என்ற சரியான எண்ணத் தெளிவு செறிவுமிக்கது. இப்போது கல்வியறிவாலும் தனித்து சிந்திக்கும் மனப்போக்காலும் கிராமப் புறங்களில்கூட இத்தகைய வாழ்க்கை முறை எதார்த்தமாகி வருகிறது.

சமீபத்தில் இறந்த நகைச்சுவை நடிகர் விவேக்கின் பெண் பிள்ளைகள் அவருக்கு ஈமச்சடங்கைச் செய்ததை ஊடகங்கள் காட்டின. அதைப்போல தனது கணவரின் ஈமச்சடங்கை செய்த நடிகை மீனா... என்று சமூகத்தில் ஆண்கள் மட்டுமே செய்யக்கூடிய செயல்களாக வைக்கப்பட்டிருந்த காரியங்களைப் பெண்கள் செய்து காட்டி சமத்துவத்தை நிலைநாட்ட விளைவது பாராட்டப்படத்தக்க செயல்கள்.

வீடுவரை மனைவி காடுவரை பிள்ளை... என்ற திரைப்படப் பாடல் வரிகள் காலாவதியாகி வருவதில் மகிழ்ச்சிதான். இன்று இறந்தவரைப் புதைக்கும் அல்லது எரிக்கும் இடம்வரை சென்று பெண்கள் அஞ்சலி செலுத்துகின்றனர். இத்தகைய சிறந்த சமூக மாறுதல்கள் ஆண் பிள்ளையின் மீதிருந்த தீவிர மோகத்தைக் குறைத்து வருகிறது. கொள்ளி போட ஒரு ஆண்பிள்ளை இல்லையே, ஆண்பிள்ளை வைத்தால்தான் கட்டை எரியும் என்பன போன்ற பிதற்றல்கள் அறிவீனத்தின் உச்சம் என்ற உண்மை உணரப்பட்டு வருகிறது.

இதற்கிடையில் இந்தியாவில் தலைவிரித் தாடும் வரதட்சணைக் கொடுமைகளுக்கு இன்றும் பெண்கள் பலியாகிக் கொண்டு தான் இருக்கின்றனர். வரதட்சணை கேட்பதைக் கேவலமாகப் பார்க்கும் சமூகப் பார்வை வேகங்கொள்ள வேண்டும். அதிகளவில் வரதட்சணைக் கொடுப்பது தங்களது குடும்ப பொருளாதார உயர்வைக் காட்டும் குறியீடாக கருதும் அறியாமை களும் அறவே நீக்கப்பட வேண்டும்.

பெண்கள் சீதனமாக நகைகளைப் பெறுவதை தவிர்த்து சகோதரர்களுக்கு

## சிந்திக்க சில வரிகள்

**உண்மை செத்துப் போய் விட்டது என்று நினைக்காதே. அது மண்ணிற்குள் விதையை மறைப்பது போன்றது. உரிய காலத்தில், உண்மை வெளிவரும்!**

**- deeRaj**



கொடுக்கப்படும் சொத்தில் பங்கு கேட்க வேண்டும். ஒவ்வொரு குடும்பத்திலும் இந்நிலை ஏற்பட்டால் வரதட்சணை என்ற சொல்லையே செயலிழக்கச் செய்துவிட முடியும். பெண்ணைக் கேட்போரிடம் தைரியமாக, பெருஞ்சொத்தாகக் கல்வியை, தொழிலைப் பார்க்கும் மனநிலையை ஏற்படுத்த முயல வேண்டும்.

குழந்தைப் பருவம் முதலே வரதட்சணை என்பது பெரும் பாவச்செயலென சொல்லிச் சொல்லி வளர்ப்போம். இத்தகைய எந்தவொரு சரியான சமூக மாற்றமும் சமூகத்தின் அடிப்படை அலகான குடும்பத் திலிருந்துதான் தொடங்கியாக வேண்டும்.

**கிலோ கணக்கில் பெண்கள் நகையணிந்து திரிவதை பழமையான நாகரீகமாகக் கருதிப் பெண்கள் அதனை உதாசீனப்படுத்த வேண்டும்.** ஏழ்மையில் மூழ்கி கிடக்கும் நமது சமூகத்தில் திருடர்களை உருவாக்குவதிலும் இல்லாதோரின் மனங்களில் விரக்தியை ஏற்படுத்தவும் இது வழி வகுத்துக்கொண்டே இருக்கும் என்பதை மறந்து போகக் கூடாது.

ஒவ்வொரு பெண்ணும் தான் விரும்பும் ஏதாவது ஒரு தொழில் கல்வியைப் பெற்றுப் பிறகே திருமணம் செய்து வைக்க அனுமதிக்க வேண்டும்.

இத்தகைய மாற்றங்களைச் சமூகத்தில் ஏற்படுத்த ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள ஆணும் பெண்ணும் தங்களது மனப் பான்மைகளில் முற்போக்கான தன்மை களை ஏற்படுத்த வேண்டும். இதற்கான விழிப்புணர்வுகளைத் திட்டமிட்டு ஏற்படுத்த அரசும் தனிமனிதர்களும் முன்வர வேண்டும்.

வெறுமனே ஏதாவதொரு குறும்படம் எடுத்து போட்டு விடுவதாலும் அவ்வப்போது சமூக ஊடகங்களில் இதைப்பற்றி பதிவுகள் வந்து போவதாலும் மட்டும் இந்நிலையை அடைந்து விட முடியாது. இதைப்பற்றின விழிப்புணர்வுகளை இன்றைய சூழலில் மக்கள் உறைந்து கிடக்கும் ஒவ்வொரு சமூக ஊடகங்களிலும் பெண்கள் விரும்பி பார்க்கும் தொலைக்காட்சி நாடகங்கள் மற்றும் திரைப்படங்கள், பாடல்கள் போன்றவற்றினிடையேயும் எதார்த்தமாகக் காண்பித்து மக்களின் மனதில் நிலைபெறச் செய்தால் ஓரளவு இதைப் பற்றின விழிப்புணர்வைப் பெறலாம்.

தாய்மையுணர்வைத் தனது மரபில் சுமந்தபடியே பிறக்கும் ஒவ்வொரு பெண் குழந்தையும் ஆண்குழந்தையைவிட ஒருபடி அதிகமாகவே நேசித்து குடும்பத்தைப் பராமரிக்கும் இயல்பைப் பெற்றிருக்கின்றனர் என்பதே நிதர்சனம். எனவே பெற்றோரை ஆண்கள் தான் கவனிக்க வேண்டும் என்ற கட்டமைப்பைத் தகர்க்கும்போதுதான் பெண்குழந்தைகள் முக்கியத்துவத்தில் சமநிலையடைவர். இன்று அத்தகைய சூழல் ஏற்பட்டு வருவதும் உண்மை.

பெண் பிள்ளை சிரித்துவிடக் கூடாது, சத்தமிட்டு பேசிவிடக் கூடாது, அதைச் செய்யக் கூடாது, இதைச் செய்யக் கூடாது... பெண் என்றால் இப்படிதான் இருக்க வேண்டும் என்பன போன்ற அர்த்தமற்ற கட்டுப்பாடுகளை அவிழ்த்து இருபாலருக்கும் சமமான சுதந்திரத்தை அளித்து வளர்க்கும்பட்சத்தில் எதிர்வரும் இளைய சமுதாயத்தில் நல்ல மாற்றங் களைப் பெற்றிடலாம்.



# பள்ளிச் சிறார்களின் பெற்றோரே!

**ஹலோ,**

**வணக்கம். வீட்டில் அனைவரும் நலமா?**

உங்களிடம் (குழந்தைகளிடம்) இருந்து எனக்கு ஓர் உதவி தேவை. குழந்தைகளிடம் கல்வி குறித்து இன்னும் நிறைய விழிப்புணர்வு தேவை எனச் சமீபத்திய உரையாடல்களின் மூலம் புரிந்துகொள்கின்றேன். கட்டாயம் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களிடமும் நிறைய உரையாடல்கள் தேவை. சுதந்திரம் பெற்று முக்கால் நூற்றாண்டையும் கடந்துவிட்டோம். இன்னும் நிறைய நிறைய உரையாடல்கள் நிகழும்போது இன்னும் நிறைய மாற்றங்களும் வேகமான மாற்றங்களும் வலுவான மாற்றங்களும் நிகழும்.

**சரி, என்ன செய்ய வேண்டும்?**

உங்கள் கையில் கல்வியில் மாற்றம் நிகழ்த்தப் பொறுப்பு கொடுத்தால் என்னவெல்லாம் மாற்றுவீர்கள்? (5-10 புள்ளிகளை எழுதலாம்)

What would you change in education if you have been given the power and responsibility?

**(கூடவே எந்த ஊர், எந்த வகைப் பள்ளி (அரசு / அரசு உதவிபெறும் பள்ளி / தனியார்), பெயர், வகுப்பு என்பதையும் குறிப்பிடவும்)**

கைப்பட கடிதம் எழுதி அதனை ஃபோட்டோ எடுத்தோ, நேராக தட்டச்சியோ எனக்கு vizhiyan@gmail.com என்ற முகவரிக்கு அதனை அனுப்பி வைக்கவும். பிப்ரவரி இறுதிக்குள் அனுப்ப முயலவும்.

(தமிழ்நாட்டிற்கென மாநிலக் கல்விக்கொள்கை உருவாக்கப்பட உள்ளது. அதற்காக ஒரு குழு உருவாக்கப்பட்டுள்ளது. 'பள்ளிக் கல்வி'க்கான உபகுழுவில் (Sub Committee) என் பெயரையும் இணைத்துள்ளார்கள். ஏற்கெனவே பரவலாகக் கருத்துக்களைக் கேட்டிருக்கின்றனர். நீங்கள் பகிரும் கருத்துகளைக் கொண்டு மாணவர்களின் விழிப்பு நிலையை அறிய விரும்புகிறேன். அடுத்தடுத்து என்ன செய்யலாம் எனத் திட்டமிட எனக்கு உதவியாக இருக்கும்.)

அன்புடன்,

**விழியன்**



# சிந்தனைச் சிறுதுகள்

பன்றியைப் பார்த்தது உண்டா? நாம் எல்லோருமே பார்த்திருக்கக் கூடும். கேள்வி அதுவல்ல. பன்றியைக் கொல்வதற்காகக் கொண்டு போகும் கடைசி நாளில் பார்த்தது உண்டா? கால்கள் நான்கையும் கட்டி, தலைகீழாகத் தொங்க விட்டபடி, பொதுவாக இருசக்கர வாகனங்களில் கொண்டு போவார்கள். இந்தக் காலங்களுக்கும் முன்னர், கவட்டுக் கம்பில் கட்டி, இருவர் தோள்பட்டையில் சுமந்தபடி கொண்டு போவார்கள். அப்போது, பன்றியின் தலை வானத்தை 'பே' என்று பார்த்தபடியே பரிதாபமாக இருக்கும். கிராமங்களில் பார்த்தது உண்டு.

அப்படிக் கொண்டு போகும் சமயங்களில், இப்படியாகப் பன்றி நினைப்பதாகப் பொதுவாகச் சொல்வதுண்டு. "ஓ நீலக் கலரில், இத்தனை அழகான, வானம் மேலே இருந்ததா? இத்தனை அழகான மரங்கள், மலர்கள், காய்கள், கனிகள், பார்க்க, பார்க்க கொள்ளை அழகாக இருக்கிறதே! இவ்வளவு நாட்களாக இதனைப் பார்க்காமல், தரையையே பார்த்து, தவறானதையே தின்று, வாழ்க்கையை வீணடித்து விட்டேனே!" என்று கண்ணீர் வடிக்குமாம். அதாவது, அப்போதுதான் பன்றிக்குப் புத்தி தெளிந்ததுபோல இருக்குமாம். ஆனாலும் விளைவென்ன?

இன்னும் சில மணி நேரத்தில் அதன் கதையே முடிந்து போகும்.

சமீபத்தில் தானியேல் 4 -ம் அதிகாரம் வாசித்தபோது, அதிலும் குறிப்பாக 34- ம் வசனம் வாசித்தபோது, இந்தச் சம்பவம்தான் என் ஞாபகத்தில் வந்தது. அந்த வசனத்தைப் பாருங்களேன்.

அந்த நாட்கள் சென்றபின்பு, நேபுகாத்நேச்சாராகிய நான் என் கண்களை வானத்துக்கு ஏறெடுத்தேன்; என் புத்தி எனக்குத் திரும்பி வந்தது; அப்பொழுது நான் உன்னதமானவரை ஸ்தோத்திரித்து, என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவரைப் புகழ்ந்து மகிமைப்படுத்தினேன்; அவருடைய கர்த்தத்துவமே நித்திய கர்த்தத்துவம், அவருடைய ராஜ்யமே தலைமுறை தலைமுறையாக நிற்கும். (தானியேல் 4:34)

**நிறைவுக்குறிப்பு :** நேபுகாத்நேச்சாரின் கண்கள் என்றைக்கு வானத்திற்கு நேராக ஏறெடுத்துப் பார்த்ததோ, அப்போதுதான் அவருக்குப் புத்தி திரும்பி வந்தது. அதன் வாயிலாகத் தேவனைத் துதிக்கவும், பிரபலப்படுத்தவும், சாட்சி பகரவும் துவங்கிய போது, அவரது ராஜ்யபாரம் மீண்டும் அவரது கைகளுக்கு வந்தது. மாட்டைப் போல புல்லைத் தின்றவர், மனிதனாக மாறி, மீண்டும் ராஜாவாக ஆட்சியைக் கைப்பற்றினார். இன்றும், நம்மில் யாராவது விரக்தியில், தோல்வியில் மருண்டு, நொந்து போய், இனி வாழ்க்கையே அவ்வளவு தான் என்று நினைப்பது போன்ற சூழலில் இருந்தால், பார்க்க வேண்டிய ஒரே இடம், மேலே இருக்கும் கடவுள் மட்டுமே. ஒருவேளை பன்றிக்கு வேண்டு மானால், மேலே பார்க்கும் நாள் கடைசியாக இருக்கலாம், ஆனால், நமக்கோ, மேலே பார்க்கும் நாள்தான், புத்தி தெளியும் நாள், ராஜ்யபாரம் கையில் வரும் நாள். அவ்வளவு ஏன், நாம் நல்ல முறையில் புது மனிதனாக, முன்னேறும் நாளாக இருக்கும் என்பது திண்ணம் என்று உறுதியாக நம்புகிறேன்.

என்றென்றும் நேசமுடன்,
**நெல்லை ஜெஸி மணாளன்.**

## சிந்திக்க சில வரிகள்

**கடவுளிடம் பாரபட்சமில்லை,**
**அனைவரும் அவருடைய பிள்ளைகளே.**
**ஏற்றத்தாழ்வுகள்,**
**பகை, விரோதங்கள்,**
**பொறாமை இவை**
**எல்லாம் நாம் உருவாக்கிக் கொண்டவையே!**

**- deeRaj**





✍ மாரி மகேந்திரன்

# இயேசுவை விற்பனை செய்பவன்...

இயேசுவை விற்பனை செய்வதற்கு ஒரு கடையைத் திறந்தேன்
எனது பாரம்பரிய வைராக்கியம் உள்ள நகரத்தில்.

அங்கே ஒரு குடிகாரன் வந்தான் அவனுக்கு தேவையானது இயேசு.

ஒரு பணக்காரன் வந்தான்
ஊசியை வாங்கியவன், இயேசுவை வேண்டாம் என்றான்.

நகரத்தை சுத்திகரிக்கும் ஒருவன் வந்தும்
சுத்தமாக நான் இல்லை சுத்தமானதும் வாங்கிக்கொள்கிறேன் என்றான்
நான் சொன்னேன் அவரை உனது அறையில் வை
நீ இயல்பாகவே சுத்திகரிக்கப்படுவாய் என்று.

நரை மயிர் மூதாட்டி தளர்ந்துபோய் வந்தாள்
மரணத்திற்குப் பிறகு இயேசுவே வழி என்று சொன்னவுடன்
அவளும் வாங்கிச் சென்றாள்.
ஆனால் அனேகமான நாட்களுக்கு பிறகு வெற்றிலை பாக்குக்காக
இயேசுவை அவளும் விற்பனை செய்து விட்டதாக செய்தி வந்தது.

ஒருநாள் ஒரு சபையின் போதகரும்
இயேசுவை மறுபடியும் வேண்டும் என்று வாங்கிகொண்டார்.
பின்மாற்றம் எனும் வஞ்சகத்தில்
இயேசுவை சபைக்கு வெளியே விரட்டி விட்டதாக
விசுவாசிகள் கூறினார்கள்.

ஓர் இரவில் நகரத்தில் உள்ள விபச்சாரியும் வந்தாள்
“இனி பாவம் செய்ய மாட்டேன்.”
எனக்கும் இயேசு வேண்டும் என்றாள்.
என்ன செய்வது? கண்ணீரை தந்து ஞானஸ்நானம் பெற்றாள்.
அவள் இயேசுவை விலை மகள் சந்தையில் விற்பனை செய்வதாக
யாரோ ஒரு பெண் கூறினாள்.

கடைசியில் வந்தவனிடம் கடைசி நம்பிக்கை இருந்தது
நான் சினிமாக்காரன் ஆனால் எனக்கு இயேசு வேண்டாம்
உலக இரட்சகர் உங்களிடம் உண்டா என்றான்!
அவனிடம் ஒரு புதிய ஏற்பாட்டைத் தந்து
இதைப் படி
இரட்சகர் உன்னை இரட்சிப்பார்
இங்கே இயேசு மட்டுமே கிடைக்கும்
இரட்சிப்பை நீதான் மேலதிகமாக வாங்க வேண்டும் என்றேன்.

இறுதியில் இயேசுவை சென்று என் தெருவில் விற்பனை செய்தபோது
எதிர்கடைக்காரன் இனி இயேசுவை விற்பனை செய்ய வேண்டும் என்றால்
எங்களிடம் முன் அனுமதி பெற வேண்டும் என்றான்.
பின் இயேசுவை எடுத்துக்கொண்டு ஒரு வனாந்தரத்தில் வைத்தேன்
நரமாமிசம் தின்னும் ஒருவன் மனமாற்றம் பெற்றவனாக இயேசுவை ருசித்தான்.

நான் அவனுடன் இணைந்து இயேசுவைப் புசிக்கிறேன்
ஆயினும் இயேசு என்னிடம் சொன்னார்...
இனி என்னை உனது அங்காடியிலிருந்து அகற்றிவிடு
நான் உன்னையே விலைக்கிரயம் கொடுத்து வாங்கியுள்ளேன் என்று.



கார்த்திகா ராஜ்குமார்

# மாறிப் போனவைகள் – 28

தலை முடி வெட்டுகிறதற்கு சலூனை தெரிவு செய்கிற உரிமையயைக் கல்லூரிக்குப் போன பின்பு அப்பாவிடமிருந்து பெற்றுக் கொண்டபின் போன சலூன்தான் அது. ஒரு பெரிய கட்டிடத்தின் கீழ்ப் பகுதியில் இருக்கிற சின்ன கடை. யார் அந்தக் கடையை அறிமுகப் படுத்தியது என்று நினைவில்லை. ஆனால் அந்தக் கடையின் உரிமையாளர் ராஜா ஒரு யூத் மட்டுமல்ல, முதல் முறையாக என்னை "Boss" என்று அழைத்து அசத்தியவர். நம்மை எவனும் கிஞ்சித்தும் பைசாவுக்கு மதித்திராத நாட்கள் அவை. "வாங்க" என்று எவரும் மறந்தும் கூட சொல்லிராத நாட்களில் சலூனில் நுழைந்ததும் அவரின் வாங்க Bossல் விழுந்தவன் அநேக வருஷங்கள் அவரின் வலையை விட்டு வெளி வர முடியாமல் இருந்தேன். அதற்கு முக்கியமான ஒரு காரணம் இருந்தது.

முதல் தடவை போனபொழுது என்னை அவர் சிம்மாசனத்தில் அமர்த்தி வெண்துணியை என் மேல் போர்த்தின விதத்தில் ஒரு லாவகமும் நளினமும் இருந்தது. என் கழுத்தை சுற்றியிருந்த துணிக்குள் தன் விரலை நாசுக்காக நுழைத்து தளர்த்தி, காதருகில் கிசுகிசுப்பாக ''இப்ப ஃபிப்ரீயாக இருக்கா Boss?'' என்று அந்த நெருக்கத்திற்காய்க் கூச்சப்பட வைத்துவிட்டு, ஒழுங்கற்ற புதர் போல் வளர்ந்திருந்த, சிலிப்பிக் கொண்டு நின்றிருந்த என் தலை முடிகளை, என்னைச் சுற்றி சுற்றி வந்து நின்று, தன் புது பொம்மையை ஆர்வமுடன் பார்க்கும் சிறுமியாகப் பார்த்து, பிறகு ஒரு தேர்ந்த மருத்துவரின் தொனியில் வார்த்தைகளை


மெதுவாக உதிர்த்தார். "Boss உங்களுக்கு ரெட்டைச் சுழி இருக்கு, முடி சூப்பர்தான். ஆனா உங்களுக்கு சரியாவே படிஞ் சிருக்காதே. ஒரு பக்கம் எந்திரிச்சிட்டு கலாட்டா பண்ணுமே. எல்லோரும் ஜோக்கடிச்சு நாறடிச்சிருப்பாங்களே" என்று நான் 'ஆமென்' மட்டுமே சொல்லக்கூடிய கேள்விகளைத் தொடுக்க, அடுக்க நான் பிரமிப்புடன் சரணடைந்தேன்.

என் மோசமான தலைமுடிப் பிரச்சனைகளுக்கும், என் தலை முடி பற்றியதான அந்தநாள் உலகத்தின் கிண்டல் கேலிகளுக்கும் ராஜா மூலமாய் விடிவு கிடைத்தது என்று நம்பினேன். தான் ஒருவர் மட்டுமே நிபுணத்துவத்தோடு என் தலைமுடியை உருப்படியாய் திருத்த முடியும் என்று ஒரு பொடியனைப்போல என்னை நம்பவைத்தது அவருடைய அசாத்திய திறமை. எந்த அளவிற்கு இது போனதெனில் ராஜா சலூனுக்குப் போக இயலாத சூழலில், கோவையிலிருந்த நாட்களில் எந்த சலூனுக்கும் போக நான் துணிந்ததில்லை. ரெட்டைச் சுழியானான என் தலையை ராஜாவைத் தவிர வேறு எவராலும் கையாள முடியாது என்று நினைத்திருந்தேன். பலர் நையாண்டி செய்தாலும் அசராதவனாய் இருந்தேன்.

எனக்கு ராஜா சலூன் பிடித்திருந்ததற்கு இன்னொரு காரணமிருந்தது, அவரின் வாய் ஜாலம். மென் குரலில் காதருகில் விரிகின்ற வசிய வார்த்தைகள் நம்மைத் தூக்கிக் கொண்டுபோய் அவரின் அத்யந்த நண்பனாய்ப் பூரிக்கவைக்கும், நிஜ அனுபவங்களில் தோய்த்து, நவரச உணர்வுகளுடன் தத்தளித்து தொடரும் வார்த்தைகள் நம்மை கொஞ்சம் குறைய வேறு உலகிற்கு கடத்தி விடும். நாமறிந்த நபர்களின் அறியாதிருந்த முகங்களை திகைப்புடன் அறிந்து கொள்ளவைக்கும்.

இடை இடையே வந்து போகிற ஜிம்காரர்கள் அருகிலிருக்கும் கண்ணாடியில் தங்கள் புஜ பலம் காட்டி உடலை முறுக்கிக் காட்டிவிட்டு ராஜாவை குரு ஸ்தானத்தில் வைத்து பேசி விட்டுப் போவார்கள். தலைப்புச் செய்திகளை வீசி விட்டு தலை சீவிப் போவார் சிலர், வெறும் கும்பிடு போட்டு நகர்வார்கள் பலர். அவர்களைப் பற்றி அவர்கள் போன பின் என்னிடம் சுவாரசியமாய் சொல்ல பல வாக்கியங்கள் உண்டு ராஜாவிடம். இப்படியாக ஒரு உலகத்திற்குள் அந்நாட்களில் என் அநேக காலைப் பொழுதுகள், "டேய் முடி வெட்டப்போனா இத்தனை நேரமாடா"என்கிற அம்மாவின் அங்கலாய்ப்புடன் முடிந்திருக்கின்றன.

கல்லூரி நாட்களில் இன்னொரு அல்லாடின விஷயம் பேன்ட் தைப்பது. அந்த நாட்களில் பெல் பாட்டம்,



பேரலல் என்று விதவிதமான வகைகள் வந்திருந்ததால் பள்ளி நாட்களின் டைலர்களை கழற்றிவைத்து விட்டு புது டைலர்களுக்காக நாங்கள் அலைந்து கொண்டிருந்த நாட்கள் அவை. அதுவும் பேன்ட்டில் முன் பக்கம் வருகிற சிங்கள் பிளிட், டபுள் பிளிட் பற்றி எல்லாம் கோனார் உரை கொண்டு விளக்கினாலும் பழைய ஆட்களுக்கு பிடிபடாதென்பதால் இந்தத் தேடல். இதிலென்ன குழப்பம் என்று முழிப்பவர்களுக்கு இதோ பதில். பேன்ட் அணிந்திருக்கும்போது சரியானபடி பேன்ட்டின் கட்டிங் இல்லையென்றால் முன் பக்கத்தில் ஒரு மாயச் சுருக்கம் வரும். நடக்கையில் அப்பக்கம் இப்பக்கமாய் ஓடி மறையும் இதைப் பலரால் புரிந்து கொள்ளுதல் இயலாது. அளவெடுக்கும் போது சரியானபடி எடுத்து உட்புறமாய் வருகிற அரைவட்ட கட்டிங் சரியானபடி அமைந்தால் மட்டுமே இது நேர்த்தியாக அமையும்.

என் நண்பன் ஒருவன்தான் கம்மர்ஷியல் சாலையில் உள்ள அவரை அறிமுகப்படுத்தி வைத்தான். பீடாச் சிவப்புடன் அவரின் உதடுகள் இருக்க, அதிலிருந்து வேகவேகமாய் வரும் திட்டல்களை வாங்கவே சுற்றிலும் அமர்த்தி இருக்கிற பொடியன்களும், சில பேசா பெரியவர்களுமாக இயங்கிக் கொண்டிருந்த கடை அது. மிக தோழமையுடன் ஹலோ சொல்லும் வார்த்தைகள். கழுத்தில் பாம்பானது தொங்கி கொண்டிருக்கும் அளவு நாடா அவரின் உடல் மொழியில் நடனமாடுவது போல் அசைந்தாடிக் கொண்டிருக்கும். நீல சோப்பை நாலாக வெட்டியது போல எப்போதும் அவர் நினைத்த மாத்திரத்தில் கையில் வரும் மார்க்கர் கட்டி, பேசியபடி துணிகளில் அந்த மார்க்கர் வரையும் கோடுகள். பள்ளியில் கணித பாடத்தில் வருவதைப் போல 'ஜ ' அச்சும் ,' ஹ் 'அச்சும் சந்திக்க போடும் ஜாமிட்ரி வரிகள் போல நம் துணியில் வரிந்து வித்தை காட்டுவார்.

பேன்ட் எப்படி ஒவ்வொருவருக்கும் தனித்தனியாய் பொருத்தமாய் அமையு மென்பதை அசத்தலாகச் சொல்லி அப்படியே செய்தும் காட்டினார். நமக்குப் பிடித்தமான துணியில் நாம் மனதில் திருப்தியான



வகையில் அமைந்து அதை அணிகிற சுகமே அலாதிதான். அவை இறக்கைகளாய் மாறி மிதக்கவும் வைக்கும். செய்கிற எல்லா தப்புகளுக்கும் ஒரு விளக்கமளித்து மண்டை காய்ச்சின மக்கள், என்னுடைய ஒடிசலான தேகத்திற்கு எல்லாம் பிடித்தபடி அழகாய் அமைய அல்லது தைக்க யாராவது இனிதான் வரணும் என்றெல்லாம் விமரிசனங்கள் சொன்ன நாட்கள் அவை. இந்தப் புதியவர் அந்த அந்நாளின் பலரும் புரிந்துகொள்ள முடியாத அக்கவலையிலிருந்து, புது துணி வாங்கும் பொழுதெல்லாம் வருகிற பயங்களிலிருந்து விடுவிக்க வந்தவர் என்றிருந்தேன்.

என்றாலும் இவரிடமிருக்கிற பிரச்சினை என்னவெனில், தருவேன் என்று வாக்களித்த நாளில் தந்ததே இல்லை. பலரின் பதட்டம் எகிற சண்டைக்கு ஆயத்தமாகி வாளும் கையுமாய்ப் போக நம் வீச்சுகளை அவர் அனாயசமாக தடுக்கும் பாணியே வியக்கவைப்பதுதான். அவருக்கென்று வரும் கதைக் காரணங்களை நீங்கள் நம்பியே ஆக வேண்டும். உங்களின் வீச்சுக்கள் எப்படி வீரியமிழக்கின்றன என்பதை நீங்களே உணர்வீர்கள். அடுத்தமுறை இந்த ஆள் பக்கம் தலை வைத்துக்கூட படுக்கக்கூடாது என்கிற வீம்பு, தைத்த புது பேன்ட் போட்டதும் முகிழ்க்கிற மகிழ்வில் மங்கி பின் மறைந்தே போய்விடும்.

**நகரின் மத்தியிலிருந்து எங்கள் வீடு உதகை புறநகர்ப் பகுதிக்கு போய் பல வருடங்களாகின சூழலில் இப்போது நினைத்தாலும் குறு நகையுடன் வருகிற நினைவுகள்தான் புரள்கின்றன. ராஜா மட்டுமே என் தலை முடியை சரி செய்ய முடியுமென்கிற பிரமை ஒரு தடவை நண்பனின் சவாலுடன் கோவை கடை ஒன்றுக்குப் போக, அங்கு அதிகம் பேசாத ஒரு பையன் மாற்றி விட்டான். என்னால் நம்ப முடியவில்லை, இத்தனைக்கும் முடி நிறைய வளர்ந்திருந்தது. அவன் முடி வெட்டினது ராஜாவை விடவும் நன்றாக இருப்பதுபோல் தோணிற்று, ராஜா என்னில் பதித்திருந்த அந்த பிம்பம் உடைப்பட்டது ஒரு பெரிய வியப்பாய் இன்றும். இப்பொழுதெல்லாம் எந்த தனித் தெரிவுமில்லை எனக்கு. ஒரு பெரிய சுதந்திரம் கிடைத்து விட்டதைப்போல எங்கும் தலையைக் கொடுத்து விட்டு கவலையின்றி கண்களை மூடிக் கொள்ள முடியும்.**

**அதே போல்தான் பேன்ட் விஷயத்திலும். அண்ணா மகன் ஜானி ஒரு முறை ரெடிமேட் பேன்ட் ஒன்றை அறிமுகப்படுத்த அது துணி வாங்கிக்கொடுத்து, பதற்றமாய் காத்திருந்து, பொறுமை காத்து, தைத்து பெற்றுக் கொண்ட பேன்ட்டை விடவும் சிறப்பாக, இருப்பதாக மனத்திற்குப் பட்டது. பிறகென்ன? இந்த நாள் வரை ரெடிமேட்தான். கல்லூரி நாட்களில் பெரிதாக சிக்கியிருந்த இரண்டு காரியங்களிலிருந்து விடுதலை பெற்ற மகிழ்வு என்றால் உங்களில் பலர் புருவமுயர்த்தி சிரிக்கவும் கூடும், நம்பாமல் இருக்கவும் கூடும். கடந்து போகிற வருடங்கள் இப்படியாக நம்மைப் பிணைத்திருக்கிற பல மாயச் சங்கிலிகளிலிருந்து விடுவித்துக் கொண்டிருக்கிறது என்பது உண்மைதான். மட்டுமல்ல. நேற்றைய முக்கியங்கள் இன்றைய அலட்சியங்களாவது ஒரு நியதி அல்லவா?**



# புன்னகையைப் பரவச் செய்வோம்!

ராபர்ட் க்ளமெண்ட்ஸ்

அவர் இப்போது இங்கில்லை. தன்னுடைய நித்திய வீட்டிற்குச் சென்றுவிட்டார். ஆனால் பல வருடங் களுக்கு முன்பு நடந்தது இது. நான் காலை நடைப் பயிற்சிக்குச் சென்றுவிட்டுத் திரும்பும் போது கூன் விழுந்த முதுகுடன், பார்கின்சன் வியாதியினால் நடுங்கும் உடலோடு, அவரது வீட்டின் வாசலில் நின்றபடி எனக்காக ஆவலுடன் காத்திருப்பார். என்னைப் பார்த்ததும் அவரது கண்கள் மின்னும்; தள்ளாடியபடி அவசர அவசரமான என்னிடம் வந்து என் கைகளைப் பிடித்துக்கொள்வார். "ஐயோ! என் கை போச்சே! இன்னிக்கு நா எழுத முடியாம போனா அதுக்கு காரணம் நீங்கதான்" என்று நான் சொல்வேன் அவரிடம்.

அவர் வாய்விட்டு சிரித்துக்கொள்வார். அவரது கூன் முதுகு இப்போது நிமிர்ந்து, முகத்தில் புன்னகை தவழ வீட்டிற்குள் போக நடப்பார்.

"எங்கப்பாவ சிரிக்க வச்சிட்டீங்க! பார்கின்சன் வந்ததுலருந்து அவர் ரொம்ப மன அழுத்தத்துல இருந்துட்ருப்பார்" என்பார் அவருடைய மகன்.

இப்படி பலரை நான் மகிழ்வித்திருக்கி றேன். சில நாள்களில் நானே நொந்து போயிருப்பேன். ஆனாலும், இவர் எனக்காகக் காத்திருப்பதைப் பார்த்ததும் அவரை மகிழ்விக்க வேண்டும் என்று நானும் மாறிவிடுவேன்.

இதைப் பற்றி நான் இன்று நினைத்துக் கொண்டிருந்தேன். நம்மில் பலர் மன அமைதி, சமாதானம் பற்றியெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறோம். ஆனால், இந்தச் சமாதானத்தை நாம் நம்மைச் சுற்றி பரவவிடாமல் இருந்தால் அதில் என்ன பயன்? இதைச் செய்வதற்கு மிகச்சிறந்த ஒரு வழி, புன்னகை.

விமானம் ஒன்று தரையிறங்கத்

தயாராகிக் கொண்டிருந்தது. விமான பணியாளர் ஒருவர் வந்து, “எங்கள் விமானத்தில் பயணித்ததற்கு நன்றி. எங்களுக்கு பிசினஸ் கொடுத்ததில் எங்களைப் போலவே உங்களுக்கும் மகிழ்ச்சியாக இருந்திருக்கும் என்று நினைக்கிறேன்.” என்றார்.

விமானம் தரையைத் தொடவும் விமானியின் குரல் ஒலித்தது, “அட எவ்ளோ பெருசா இருக்றான்!” என்றார். யாருக்கும் புரியவில்லை. “நாம் இறங்க வேண்டிய இடத்தில் மேகங்கள் கூடியிருப்பதால் வானிலை மோசமாக இருக்கிறது. ஆனால் நாம் இறங்குவதற்குள் அதுங்களே சரி பண்ணிக்குங்கன்னு நினைக்கிறேன்” என்று அவர் சொன்னதும் எல்லாரும் சிரித்துவிட்டார்கள்.

விமானப் பணிப்பெண் ஒருவர், “விமானத்த விட்டு இறங்குறப்ப உங்களுடைய பொருள்களை பத்திரமா எடுத்துக்கோங்க. விட்டுட்டு போன பொருள் எல்லாம் நாங்க சரிசமமா பிரிச்சுப்போம். குழந்தைங்களையோ, உங்க கணவன் அல்லது மனைவியையோ விட்டுட்டு போயிடாதீங்க ப்ளீஸ்” என்றார். விமானத்தில் சிரிப்பலை.

விமானம் நின்றுவிட்டது. பயணிகள் இறங்கிக் கொண்டிருந்தனர். “கடைசியா இறங்குறவங்க விமானத்த சுத்தப்படுத்தணும்” என்று ஒரு குரல். எல்லாப் பயணிகளின் முகத்திலும் புன்முறுவல்.

இந்த விமானத்தில் ஏறுவதற்குப் பலர் பலவித காரணங்களைக் கொண்டிருந்திருக் கலாம். பிரியமான ஒருவர் நோயில் இருந்திருக்கலாம், அல்லது பிரியமான ஒருவரின் இறுதி நிகழ்வுக்கு வந்திருக் கலாம், தொழிலில் பெருத்த நஷ்டத்தோடு ஒருவர் வந்திருக்கலாம். ஆனால், சிரிப்பு எல்லாவற்றையும் மாற்றிவிட்டது, ஒரு புதிய பரிமாணம் உருவாகியிருக்கலாம்.

ஜன்னலோரமாக நின்று திடீர் தென்றலை அனுபவித்திருக்கிறீர்களா? ஒரு புன்சிரிப்பு / சிரிப்பு அதைத்தான் செய்கிறது. அது முகச்சுளிப்பை துரத்திவிடுகிறது, கவலையை விரட்டிவிடுகிறது, மகிழ்ச்சியை அள்ளித் தருகிறது.

நீங்கள் என்ன தொழிலும்ப் பணியும் செய்து கொண்டிருக்கலாம். ஆனாலும், உங்களைச் சுற்றி புன்னகையைத் தவழ விடுங்கள். சிரிப்பை பரப்புங்கள். அற்புதங்கள் நிகழ்வதைக் காண்பீர்கள். அதே கொண்டாட்டமும் மகிழ்ச்சியும் எங்கும் சுற்றி உங்களிடமே திரும்புவது உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும்.

உங்களது ஆன்மாவின் சமாதானம்/ அமைதியைச் சுற்றிலும் பரப்புவது சிரிப்பு/ புன்னகைதான்.

■ ■ ■



**ஆசிரியரின் இதர படைப்புகளை ஆங்கிலத்தில் வாசிக்க https://bobsbanter.com/ என்ற இணையதளப் பக்கத்தைத் தொடரலாம். rtgclements@gmail.com என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொண்டு வாட்சப்பில் தினமும் அவருடைய கட்டுரைகளை ஆங்கிலத்தில் பெறலாம். இக்கட்டுரையானது ஆசிரியரின் அனுமதி பெற்று, தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்படுகிறது.**



# வானவில் மனிதனும் மௌனமான களையற்ற உலகமும்

(தொடர்ச்சி)

எழுத்து: அக்ரம் சகி படவிளக்கம்: ஹெய்லி ஸ்டேன்பரி
தமிழில்: வில்பர்ட் c. துரை



வானவில் மனிதன் ஒரு கருவியை உருவாக்கத் தொடங்கினான். முழு உலகத்துக்கும் வண்ணமும் இசையும் கொடுக்கும் கருவி அது.



கடினமான ஒரு வேலைதான் அது. இருந்தாலும், வானவில் மனிதன் அதைச் செய்து முடித்துவிட்டான்.

வானவில் மனிதன் அதனுள் ஏறி, உள்ளே உட்கார்ந்துகொண்டான்.

கருவியை அவன் இயக்கும்போது பலர் நின்று பார்க்கக் கூடினர். ஒரு மெல்லிய ரீங்காரம் கேட்டது. அதன் பகுதிகள் செயல்படத் தொடங்கின.




மெதுவாக, அந்தக் கருவியிலிருந்து
வினோதமான ஒன்று வெளியே வந்தது.

வண்ணம்!
கொஞ்சம் கொஞ்சமாக அந்தக் கருவி
வண்ணங்களை வீசத் தொடங்கியது.

| | |
|---|---|
| சிவப்பு | நீலம் |
| ஆரஞ்சு | மஞ்சள் |
| ஊதா | இளஞ்சிவப்பு |
| வெள்ளை | பழுப்பு |

இடையில் எல்லா வண்ணங்களும்.



உங்கள் கற்பனையில் இருக்கிற எல்லா வண்ணங்களும் அந்தக் கருவியிலிருந்து வெளிவந்தன. அது வண்ணங்களாலும், ஓசையாலும், இசையாலும் முழு உலகத்தையும் நிரப்ப ஆரம்பித்தது. பறவைகள் பாடத் தொடங்கின. கடலானது கரையை நோக்கி வருவதும் போவதுமாக ஒலி எழுப்பியது. உலகம் முழுவதும் மக்களிடமிருந்து சிரிப்பும் கொண்டாட்ட சத்தங்களும் எழுந்தன.

தொடரும்...

PRO
SOUND VISION

LD systems
your sound. our mission.

# உங்கள் ஆலயத்துக்கு எங்கள் ஸ்பீக்கர்களை வாங்க...

## ஐந்து காரணங்கள்

இலவச
செயல்முறை விளக்கம்
உங்கள்
சபையிலேயே!



- எதிரொலியை இல்லாமல் ஆக்க!!!
- மொத்தத்தில் அளவிலும், விலையிலும் சிறியது!!!
- ஒரே ஸ்பீக்கர் 2,000 பேர் வரைக்கும் போதுமானது!!!
- சத்தம், துல்லியம், இயற்கை மிகுந்த ஒலி!!!
- ஒலிப் பொறியாளர் தேவையில்லை நீங்களே போதும்!!!

FREE
DEMO
9442440088
www.ld-systems.com/en/